அறிவின் திருதர்கள்

K.A. மதியழகன் B.A.

அறிவின் தூதர்கள்

K.A. மதியழகன் B.A.

திராவிடப்பண்ணை

34, சிந்தாமணி :: திருச்சி-2

இரண்டாம் பதிப்பு: 1968

உரிமையுடையது.

விலை ரூ. 1·00

சக்திவேல் பிரஸ், திருச்சிராப்பள்ளி-2.

சாக்ரடீஸ்

"வாலிபர்களைக் கெடுக்கிறான். படை திரட்டுகிறான். அரசாங்கம் மரண தண்டனை விதிக்கவேண்டும்"

இப்படிப்பட்ட குற்றச்சாட்டு ஒரு வழக்கு மன்றத்திலே பதிவு செய்யப்பட்டது. குற்றஞ் சாட்டப்பட்டவனோ போரிலே பழக்கப்பட்டவன். ரணகளசூரன். ராணுவத்திலே பொறுப்பேற்று பணிபுரிந்த வீரன். களம் பல கண்டவன். போர்க்களத்திலே புயலெனக் கிளம்பி மாற்றாரைத் தரைமட்டமாக்கியவன். மரணத்தைக் கண்டும் மலையாது எதிரியின் பிணக்குவியலைக் குவித்தவன். ஒழுகுகிற ரத்தத்தையும் துடைக்கவும் நேரமின்றி எதிரியை சுக்கு நூறாக்கியவன். தனது படையினரில் பலருக்கு ஆபத்து சூழ்ந்திருந்த நேரத்தில், எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்புவித்த தீரன். சொந்தப் படையினரே, சோர்வு தட்டி, உற்சாகம் குறைந்திருந்த நேரத்தில் அவர்கள் உள்ளத்திலே, உடலிலே உணர்ச்சி மூறுக்கேற்றியவன். அந்த மண்டலம் முழுதுமே இவன் ஓர் ஈடு இணையில்லாத தளபதியாவான். தாயகத்திற்கு, தரணியிலே ஓர் புதிய அந்தஸ்தைப் பெற்றுத் தீருவான். பெற்று வளர்த்துப் பெருமைப்படுத்திய மண்ணுக்கு வெற்றிமாலைகளைச் சூட்டுவான் என்று கருதியது.

சரி! அப்படிப்பட்டவன்தான் கெடுமதியால், அரசாங்கத்தைக் கவிழ்க்க, மாற்றவரிடம் மண்டியிடச் செய்ய, நாசவேலை செய்திருக்கிறான் போல் இருக்கிறது

என்று கருதுவீர்கள். நாட்டுத் துரோகி ! நயவஞ்சகன் ! வீரன் என்ற போர்வையிலே உலவி பிறந்தநாட்டின் விடுதலையை விலைபேசத் துணிந்த வீணன். வேண்டியது தான் வழக்கு. வேரோடு அறுக்கவேண்டும் இத்தகைய விஷப்பூண்டுகளை என்றும் எண்ணுவீர்கள். யார் அத்தகைய குற்றவாளி ? குறுகிய புத்திகொண்ட அவனை சட்டம் சரியாகத் தண்டித்ததா என்றும் கேட்கத் தோன்றும். எந்த நாட்டிலே இருந்தான் அந்த இழிமகன் ? அவன் செய்த தவறுகளின் முழு விபரமென்ன என்றும் அறியத் தோன்றும்.

அவன் வாலிபர்களைப் படை திரட்டியது என்னவோ உண்மைதான். ஆனால் அது வாளேந்திய படையல்ல. அறிவுப்படை. நாட்டைக் கெடுக்கிறான் என்றனர் நாடாள வந்தோர் அவர்கள் கருத்துப்படி.

அவன் சொன்னான்; நமது நாடு மாத்திரமல்ல, நானிலமே வாழுவதற்கு வழி இருக்கிறது எனதுபணியிலே என்று. இவ்வளவோடு விட்டுவிடவில்லை. குற்றச் சாட்டிலே மற்றோர் பிரிவும் இருந்தது. அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது, “இவன் நமது வழிபாட்டு முறைகளை, ஆண்டவர்களை அதற்காக நாம் செய்யும் அனுஷ்டானங்களை ஆச்சாரங்களை, குருமார்களை அவர்கள் போதிக்கும் கோட்பாடுகளை கேலி செய்கிறான். ஆராய்ச்சி என்கிறான். புதிய கொள்கைகளை புகுத்த முயற்சிக்கிறான். அவன் ஓர் நாத்திகன். சாஸ்திர விரோதி! சனாதன தர்மத்தைக் கெடுப்பவன்” என்று. வீரன் மட்டுமில்லை போலிருக்கிறது. விதண்டாவாதியாகவும் வேத நிந்தகனாகவும் இருக்கிறானே என்று வைதீகர்களுக்குத் தோன்றும். வேடிக்கை அதுவல்ல. அவன் வீரனாய் உலவிய நேரத்தில் அவன் மீது வழக்குத் தொடரப்படவில்லை. வயோதிகத்தின் எல்லையிலே உலவிய நேரத்தில் தான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்

பட்டான். அப்போது அவனுக்கு வயது எழுபது ஆகி இருந்தது.

விசித்திரமாய் உள்ளதே இவ்வழக்கு? அந்த விபரீத புருஷன் யார்? எந்த நாடு? எந்தக் காலம் என்ற சிந்தனை எழுவது இயற்கை. வழக்கு நடந்த காலம் 2400 ஆண்டுகளுக்கு முன்பு. இடம் கிரேக்க மண்டலம். எழில்மிக்க ஏதென்ஸ் நகரம். குற்றவாளி அறிவின் தூதரென இன்று அவனி புகழும் பேரறிஞர் சாக்ரடீஸ். வழக்கு மன்றம் 501 பேர் கொண்ட அறங் கூறவையம். வழக்குத் தொடுத்தோர்: மெலிடஸ் (Meletus) அனிடஸ் (Anytus) லைகன் (Lycon) என்ற மூவர்.

சாக்ரடீஸ் ஓர் கற்சிற்பியின் மைந்தன். சாக்ரடீஸோ மக்களின் சிந்தனைச் சிற்பியானார். போரிலே 3 முறை பணியாற்றி புகழும் பெருமையும் பெற்றார். கிரேக்க நாடோ வீரத்தின் விளைநிலம், நாகரிகத்தின் தொட்டில் என்ற சிறப்புகளைப் பெற்றிருந்தது. மன்னனாட்சியில்லா மல், மகுடந்தாங்கிய மனிதப் பொம்மைகளை அரசர் களாக ஏற்காமல், குடியரசு முறையை கொண்டிருந்தது. இவ்வளவெல்லாம் இருந்த நாட்டில் அறிவொளி இல்லை. அறியாமை கோலோச்சியது. சீமான்கள் சிங்கார மாளிகை களிலே துன்பம் புகாதவாறு தாழ்ப்பாளை அடைத்துவிட்டு இன்பத்தில் மூழ்கிக் கிடந்தனர். ஆனால், அவர்கள் சிந்தனைக் கதவுகள் திறக்கப்படவில்லை. வெற்றிவிருந்து, விருந்து வேடிக்கை எல்லாம் இருந்து-விவேகம், விசாரணை யறிவு ஆகிய இவை இல்லை. அச்சத்திலே பிறந்த ஆயிரம் தேவதைகளைக் காட்டி ஆர்ப்பாட்ட வாழ்வு நடத்தினர். ஆண்டவன் அடியார்கள் என்று சொல்லிக்கொண்டு ஊரை ஏய்த்த ஆலயவாசிகள்—ஆனால் அறிவு விளக்கம், ஆராய்ச்சி உணர்ச்சி, அழகின் இலக்கணம் இவை ஏதும் இல்லை.

இந்தக் கேள்விகளெல்லாம் அந்த முதியவரின் மனதைக் குடையலாயின. எல்லாப் பொருளுக்கும் விளக்கம் கேட்டார். ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை சலியாது கேட்டார். அவரது மூளையோ ஓயாத சிந்தனைக்கூடமாகிவிட்டது. அறிவின் விளக்கம் கிடைத்தது. அறியாமையின் ஆதிக்கத்தையும் உணர முடிந்தது. எனவே உணர்ந்த உண்மைகளை ஊராருக்குப் போதனை புரிந்தார். உன்னையே நீ உணர்ந்து பார். உண்மையைத்தேடு. உள்ளத்தைத் தூய்மையாக்கு. அழகைப் பாராட்டு என்றெல்லாம். உபதேசங்கூட அல்ல, உரையாடல் மூலம் ஏதன்ஸ் நகர மக்களிடையே கூறினார். மேடைப்பேச்சு மூலமல்ல — கேள்வி பதில் என்ற முறையில் சொற்பொழிவு மூலமல்ல—வினா—விடை என்ற முறையில் தனது கருத்துக்களை சகலரிடமும் வாதித்தார், நெடுங்காலமாக இருப்பது என்பதற்காகவோ, நமது மூதாதையர் பின்பற்றியது என்பதற்காகவோ, பெரியவர்கள் கூறியது என்பதற்காகவோ ஒன்றை நம்பவோ ஏற்றுக்கொள்ளவோ கூடாது. உங்கள் அறிவு சரியென்று சொல்லவேண்டும். நம்பிக்கையின் காரணமாய் நம்பக்கூடாது என்ற அறிவுப் பிரசாரத்தைப் பரப்பத் தொடங்கினார். மந்தை வெளிகளிலே, மலர்ச் சோலைகளிலே, சந்தைக் கடைகளிலே, ஆற்றுப் படிக்கட்டுகளிலே, ஆலயத்தின் மண்டப வெளியிலே, உடற் பயிற்சிக் கூடத்திலே, ஊரார் கூடும் வேறு இடங்களிலேயெல்லாம் நின்றுகொண்டிருந்தார். அவரைச்சுற்றி ஓர் கூட்டம். விவாதம் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. எல்லாப் பொருள்களைப்பற்றியும்—வானக் கூரைக்குக் கீழே உள்ள எல்லாப் பொருள்களைப்பற்றியும் என்றல்ல. அதையும் தாண்டி பிரபஞ்சம் முழுவதைப்பற்றியும், அதன் உற்பத்திபற்றியும் ஆராய்ச்சி நடந்துகொண்டே இருந்தது. வயோதிகர் ஒருவர். அவரைச் சுற்றி வாலிபர் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. அடர்ந்து படர்ந்த வெண்மையான தாடி. அறிவை உமிழும் கண்கள் பஞ்சை போன்ற

தோற்றம். ஆனால் அவரிடத்தில் வாலிபர்கள் தங்கள் நெஞ்சைப் பறிகொடுத்தனர். அவர்களை வசீகரிக்கும் சக்தி அவருக்கு இருந்தது. பட்டத்தரசர் போல வாழ்ந்த சீமான் வீட்டுப்பிள்ளைகளே சாக்ரடீஸின் புனிதக் கொள்கைகளைப் பின்பற்றவும் பாராட்டவும் முன் வந்தனர். அரசாங்கத்திலே அந்தஸ்து, அதிகாரம் ஆர்ப் பாட்டம் அத்தனையும் இருக்கும் தங்களுக்கு இல்லாத ஆதரவு இந்த ஆண்டிக்கு வளருவதா என்று முதலிலே ஆச்சரியம் பிறகு அழுக்காறு, இறுதியாக அச்சமடைந் தனர் அரசியல் சூதாடிகள் ! ஆலயவாசிகளோ, நாமோ ஆண்டவனின் தூதர்கள், அப்பனின் பிரதிநிதிகள். அரசாங்கமோ நமது சொல்லே சட்டம் என்று ஆடுகிறது மக்களோ குருமார்கள் என்று பூஜிக்கிறார்கள். இந்தக் கிழவனின் கிறுக்கு மொழிகளைக் கேட்டுக்கொண்டு இளைஞர்கள் நம்மை நமது மார்க்க போதனையை, மதத் தத்துவங்களை மடமை, புரட்டு, குருட்டு நம்பிக்கை என்றெல்லாம் கேலிபேசுகின்றனர். கைகொட்டி நகைக் கின்றனர். இந்த நிலைவளர்ந்தால் பழைய சம்பிரதாயம் என்னாவது என்று கிலிகொள்ள ஆரம்பித்தனர்.

சாக்ரடீஸின் அறிவுப்பணி ஒருபக்கம் வளர்ந்து கொண்டே இருந்தது. வேறு இடங்களிலே சாக்ரடீஸ்பற் றிய சந்தேகமும் வளர்ந்துகொண்டே இருந்தது. ஆலய வாசி அரசியல் ஆதிக்கக்காரன் கூட்டுப்படைபெருகிற்று.

மறுபக்கம் இதையே புரியாது தன்னந்தனியாக தனது வேலையைச் செய்துகொண்டிருந்தார் அந்தக் கிழவர். பொறாமையும் அச்சமும் தனது வேலையை விரைவாகச் செய்துமுடித்தது.

புதுவாழ்வின் போதகனுக்கு, அறிவின் தந்தைக்கு எதிராக பழமையும் வைதிகமும் அனிடஸ் உருவிலே போர் முரசம் கொட்டியது. சாக்ரடீஸ் மீது குற்றச் சாட்டு பதிவு செய்யப்பட்டது. வழக்கு மன்றத்திலே நிறுத்தப்பட்டான். வழக்கு மன்றம் என்பதுகூட சரி

யல்ல, வஞ்சக மண்டபம் என்பதுதான் சரி. அது ஓர் வழுக்கு நிலமாய் இருந்தது. அந்நாட்களில் கிரேக்க வழக்குமன்றமே விசித்திரமானது. வயது வந்தோரெல்லாம் நீதிபதியாய் அமரும் வாய்ப்பிருந்தது. அவர்களில் 6000 பேர் ஆண்டுதோறும் சீட்டுகளின்மூலம் பொறுக்கப்பட்டனர். அவர்கள் பல பிரிவாக அமர்ந்து நீதி வழங்கினர். இந்த வழக்கில் அமர்ந்திருந்தோர் தொகை 501. ஐந்நூறுக்கு மேற்பட்டவர் நீதிபதிகள். அதற்குத் தலைமை தாங்கும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அபிப்பிராயம் சொல்ல உரிமை கிடையாது. 20 வயதுக்கு மேற்பட்ட பலர் உறுப்பினர்களாய் இருந்தனர். மேலும் வேதனையான நிலைமை ஆலயவாசிகளின் தொகை அமோகமாய் இருந்தது. பிறகு நீதி எப்படி இருக்கும் என்று கேட்கவா வேண்டும். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் நமது சென்னை சட்டசபையைப்போல் ஏறக்குறைய 2 பங்கு அளவு, கோர்ட் இருந்தது. அதைத்தான் வழக்குமன்றம் என்று அழைத்தனர். பொதுக்கூட்டம் என்று சொல்லியிருந்தால் பொருத்தமாய் இருந்திருக்கும். நீதிபதிகளாய் அமர்ந்தோர் ஏதன்ஸ் நகரிலேயே உலவுபவர்கள். ஊரார் உரையாடல்களிலே பங்கு கொண்டவர்கள். சொந்த விருப்பு வெறுப்புக் கொண்டவர்கள் அரசியல் கூடாரங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வழங்கிய நீதியின் லட்சணம் எப்படி இருந்திருக்கும். ஆனால் அத்தனை பேரும் நீதியின் அவதாரங்கள்போல் வழக்கை விசாரிக்குமுன் "அதிகாரத்திற்கோ, அச்சத்திற்கோ பயப்படாமல் எது நீதியோ அதைக் கூறுவேன். குற்றவாளியையும் குற்றஞ் சாட்டுவோனையும் பாரபட்சமின்றி கவனிப்பேன். ஜூவஸ் (Zeus)மீது, அபொல்லோ (Apollo)மீது, டெமிடர் (Demeter) மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். எனது ஆணைப்படி நடப்பேனேயானால் எனது ஆயுள் நீளட்டும். அநீதி இழைப்பேனானால் நானும் என் குடும்பமும் பூண்டோடு நாசமாகட்டும்" என்றுதான் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் நடந்ததென்ன?

வழக்கு ஆரம்பமாகியது. மெலிடஸ் அனிடஸ் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினர். சாட்சிகளும் விசாரிக்கப் பட்டனர். வழக்கிலே ஒரு அம்சம் குற்றஞ் சாட்டுபவனே என்ன தண்டனை விதிக்கவேண்டும் என்று கூறலாம், குற்றவாளி ஒரு தண்டனையைக் குறிப்பிட லாம். கோர்ட்டார் என்ன கருதுகிறார்களோ அந்தத் தண்டனையை அளிப்பது என்ற முறை இருந்தது. மெலிடஸ் சாக்ரடீஸுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்று வற்புறுத்தினன். சாக்ரடீஸ் சாந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தா.ர் அவரின் முறை வந்தது. சாக்ரடீஸை என்ன சமாதானம் கூறுகிறீர் என்றனர் மன்றத்தார்.

சாக்ரடீஸோ தன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் குற்றம் என்பதையே மறுத்தார். அதைச் செய்வது தனது நீங்காக் கடமை என்பதை வலியுறுத்தினர். கோபம் வராதா அந்தக் கோர்ட்டாருக்கு! திகிலுடன் சாக்ரடீஸைக் கவனித்தனர். சாக்ரடீஸ் பேசுகிறார்: "ஏதன்ஸ் நகரம் பெரிய அளவில் இருப்பதால் அறியாமைத் தூக்கத்திலே மூழ்கியிருக்கிறது, ஆற்றல் மிக்க சிங்கம் படுத்துறங்குவதுபோல, ஓர் ஈ சிங்கத்தை எழுப்புவதுபோல அதை உறக்கத்திலிருந்து எழுப்பினேன். இந்த விழிப்புணர்ச்சி வர வேறோர் ஈ வருமா என்பதை யோசியுங்கள். எனது பணி அறிவாராய்ச்சி, சிந்தனை செய்வது. வேறு அலுவல்களைக் கவனிக்க எனக்கு நேரமில்லை. அறிவு அணி அன்னை நாட்டுக்கு வேண்டுதில்லை என்பது தங்கள் கருத்தா? அறிஞர்களென ஊரை ஏமாற்றிய உன்மத்தரின் உண்மை உருவம் எனது பகுத்தறிவுப் பணியினால் புரியலாயிற்று. கபட வேஷதாரிகளைக் கண்டுகொண்டனர் வாலிபர்கள். அறியாமைக் கிடங்கிலே வாழும் அவர்கள் ஆத்திரப்படுவதிலே அர்த்தமிருக்கிறது. நாடு என்மீது ஏன் பழி சுமத்தவேண்டும். எனக்கு என்ன பட்டம் பதவிகள்

பாதத்திலே வந்து விழாதா? பகல் வேஷமிட்டு படாடோபமாய் உலவமுடியாதா? அல்லது அந்த முறைதான் எனக்குத் தெரியாதா? அதற்கு வேண்டுவதெல்லாம் பக்குவமாய் பேசுவதும் பல்லிளிப்பதும் தானே! பின் ஏன் "பகுத்தறிவு" பகுத்தறிவு என்று கூறி, பஞ்சைபோல், பராரிபோல் நான் உலவ வேண்டும். நாடாள்வோரின் அடக்குமுறை என்மீது பாயும் என்று தெரிந்திருந்தும். அன்பார்ந்த ஏதன்ஸ் நகரப் பெருமக்களே! அனிடஸ் பேச்சைக் கேட்கவில்லை. உன்னை விடுதலை செய்துவிடுகிறோம். ஆனால் ஒரே விதி. அதாவது நீ இனிமேல் சிந்தனை செய்யக்கூடாது, புதிய பொருள்களைப்பற்றி ஆராயக்கூடாது, பகுத்தறிவைப் பரப்பக்கூடாது என்று கூறுவீர்களானால் எனது பதில், நான் உங்களை மனதார நேசிக்கிறேன், மதிக்கிறேன். ஆனால் எனக்கு ஆற்றல் இருக்கும்வரை, எனது ஆவி அகலும்வரை, எனது கடைசி மூச்சு இருக்கும்வரை இந்த அறிவுப்பணியைத் தொடர்ந்து நடத்துவேன். ஓய மாட்டேன் என்பதுதான்." குற்றவாளி என்பதையும் மறந்துநீதிபதிகளுக்கு நீதிபதிபோல் பேசினார் இப்படி திட்டவட்டமாகப் பேசப் பேச இவரை விட்டுவைத்தால் நாடு என்னாவது என்ற திகில் வளர்ந்தது. நீதி மன்றத்திலே இருந்த குருட்டு வெறியர்களுக்கு. குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கினர். அதுவும முழுத்தீர்ப்பல்ல. 501 பேர் கொண்ட சபையிலே 281 பேர் "குற்றவாளி!" எனக் கூறினர். 220 பேர் குற்றவாளி அல்ல என்றனர். 31 பேர் இப்பக்கம் சாய்ந்திருந்தால் விவேகிக்கு விடுதலை அறிவுக்கு வாகைமாலை கிடைத்திருக்கும். சட்டம் தனது வேலையை செய்து தீர்த்தது, அறிஞனின் உடலும் உயிரும் தான் சாய்ந்தது.

"மரண தண்டனை விதிக்கவேண்டும்" என்றான் முரடன் மெலிடஸ். நீர் என்ன தண்டனை பெற விரும்புகிறீர் என அற மன்றத்தார் சாக்ரடீஸைக் கேட்டனர். சாக்ரடீஸின் நண்பர்கள் ஆசை காரணமாய் இவர் ஏதா

வது கூறி தப்பித்துக்கொள்ளக் கூடாதா என விரும்பினர். அவரை ஆதரிக்கவும் வேறு மண்டலங்களிலே ஆட்கள் இருந்தனர். அவரோ புன்னகையுடன் “எனக்கு என்ன தண்டனை விதிக்கவேண்டும் தெரியுமா? நீதிபதிகளே! தேரோட்டுவதிலே திறமைசாலி, புரவி ஓட்டுவதிலே கெட்டிக்காரன், போர்க்களத்திலே வீரமாகப் போராடியவன் ஆகியோரின் ஆற்றலைப் பாராட்டி கிரேக்க அரசாங்கம் ‘மானியம்’’ தருவது வழக்கமல்லவா? அது போலவே கிரேக்க நாட்டுமக்களின் அறிவுத் தெளிவுக்கு, உண்மை விளக்கத்திற்குப் பணியாற்றி அவர்களை செயலாற்றும் சிங்கங்களாக்கும் கடமையைச் செய்யும் இந்த அறிவின் தூதனுக்கு “மானியம்” கொடுத்து வாழ்நாள் முழுவதும் இந்த பணி செய்ய வசதி செய்து தாருங்கள் இதுதான் எனக்கு சரியான தண்டனை!” என்றார்.

கோப்பையிலே நஞ்சையிட்டுப் பானத்துடன் கலக்கி அதைப் பருகவைத்து சாகச்செய்வது என தண்டனை விதித்தனர். கிரேக்க நாட்டு வரலாற்றையே இரத்தக்கறை படியச்செய்தனர். இந்த அக்கிரமத்தைச் செய்து அவமானத்தைத் தேடிக்கொண்ட ஆண்டு கி. மு. 399

மரண தண்டனை விதித்தனர் மாபாவிகள். அந்த மாவீரரோ மரணத்தைக்கண்டு மருளவில்லை. மாறாக அவர்கள் செயலைக்கண்டு சிரித்தார். வயோதிகப் பருவத்திலேயுள்ள நான் விரைவில் இறந்து போவேன். ஆனால், என்னைக்கொல்வதன் மூலம் மாபழியைத் தேடிக் கொண்டீர்கள். என்னைக் கொல்வதன்மூலம் எனது கொள்கைகளைப் புதைகுழிக்கு அனுப்பி விட்டோம் என்று கருதாதீர்கள். நான் மண்ணாகலாம் எனது எண்ணங்கள் மக்கள் மனதிலே செடியாகி, மரமாகி வளர்ந்து

விட்டது அதை அழிக்க உங்களால் முடியாது. எனது பணியை நடத்த ஆயிரம் ஆயிரம் அறிவின் தூதர்கள் வரத்தான் போகிறார்கள். அவர்கள் வெற்றி வீரர்கள். அவர்கள் பரப்பும் அறிவின் ஜோதியை அணைக்க முடியாது. அவர்கள் அணையா விளக்குகள்! சாக்ரடீஸ் பாதை வென்றது என்று ஒருநாள் சரிதம் கூறும்" என்றார். கிரேக்க நாட்டு வழக்கப்படி தண்டனை நிறை வேற்றப்படுவதற்கு இடையே ஒருமாதகாலம் சிறையில் இருந்தார். இந்த இடைவேளையிலும் அறிவுப்பணியை நண்பர்களிடம் செய்தார். சாவைப்பற்றிய சஞ்சலம் சிறிதுமின்றி சந்தோஷமாகக் காணப்பட்டார் அவர் தப்புவிக்கவேண்டும் என்று நினைத்திருந்தால் வழிகள் இருந்தன. அவர்மீதுள்ள அன்பால் அந்த யோசனைகள் கூட கூறப்பட்டது. ஆனால், அவரோ நாட்டின் சட்ட திட்டங்களுக்கு பணியவேண்டியது தனது பொறுப்பு. பிடிக்கவில்லையென்றால் மாற்ற உரிமையிருக்கிறதே தவிர, அதிலிருந்து தப்பிக்க முயலுவது தகாது என்றார். அவர் நாட்டுக்கும் நானிலத்திற்கும் அளித்தது அறிவுக் கோப்பை! நயவஞ்சகர்கள் அவருக்கு அளித்ததோ நஞ்சுக்கோப்பை, இதை அந்த நல்லறிவாளர் உணர்ந் திருந்தும் தனது பணியைச் செய்தார். சாக்ரடீஸ் கூறிய அந்த சாகா மொழிகள், "எனக்குமுன் எவ்வளவோ பேர்கள் பாமர மக்களின் அறியாமையாலும் ஆத்திரத் தாலும் சித்திரவதைக்கு ஆளாகியுள்ளனர். நானும் மக்களின் அறியாமைக்கு பலியாவேன். எனக்குப் பிறகும் எண்ணற்ற மாவீரர்கள் உண்மைக்காக. நேர்மைக்காக, அறிவிக்காக தங்களது உயிரைப் பணயமாக இழக்கப் போகிறார்கள். இது நிச்சயம்."

புத்தர்

நள்ளிரவு..............

கபிலவாஸ்து முழுதும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தது. எங்கும் நிசப்தம். திடீரென அவனுக்கு ஓர் உறுதி பிறந்தது. மலர்ப் படுக்கையிலே யசோதரை தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது அணைப்பிலே சின்னஞ் சிறிய குழந்தை ராகுலன் கண்ணயர்ந்து கொண்டிருந்தான். அருகே மங்கிய குத்துவிளக்கு. அதன் சிவந்த ஒளியிலே அவர்களின் முகத்தைப் பார்த்தான். ஒரு நிமிடம் மனத்திலே சலனம். அரசபோகம் ஐஸ்வரியம், யசோதரையின் ஆசை முத்தங்கள், அன்பு அணைப்புகள், குழந்தையின் கொஞ்சும் மழலை மொழிகள், அத்தனையும் அவனது உறுதியை நிலை குலையச் செய்தன. ஆனாலும், உரம்பெற்ற அவனது உள்ளம் தியாக வாழ்வை விரும்பியது.

சந்தடியின்றி வெளியேறிவிட்டான். அரண்மனையைக் கடந்து, அழகிய நகரத்தைக் கடந்து, வாய்க்கால், வயல் வெளிகளையெல்லாம் கடந்து சென்று கொண்டிருந்தது ஒரு குதிரை. குதிரையின் குளம்படிச் சப்தம் தான், நிசப்தமான அந்த நள்ளிரவின் மௌனத்தைக் கிழித்துக் கொண்டிருந்தது. மங்கிய நிலவொளியிலே, பரந்த வானக் கூரையிலே ஜொலித்த வைரக்குப்பையின்

கீழே போய்க் கொண்டிருந்தான், புதுமைகாணப் புறப் பட்ட அந்த வீரன். நாட்டின் எல்லையையும் தாண்டி விட்டான். சலசலவென ஓடும் சிற்ருறரு, பரந்த மணல் வெளியிலே கீழே இறங்கிஞன். தனது அழகிய மயிரை, வாளால் வெட்டிஞன். பட்டாடைகளைக் களைந்தான். அருணோதயம் தென்பட்டது. பரந்த உலகிலே ஆண்டியாகி, உண்மையைத் தேடிப் பயணம் துவங்கிஞன்.

கால்நடையாகவே தெற்கே நடந்தான். விந்திய பர்வதத்தை அடைந்தான். அங்கே 'தபசிகள்,' பலர் வாழ்ந்தனர். அவர்களிலே இவனும் ஒருவஞஞன். தாங் கரும் தவமேற் கொண்டான். பட்டினி இருந்தான். விரதம் மேற்கொண்டான். உடலை வாட்டிக்கொண் டான். அத்தனையையும் அனுஷ்டித்தான். அந்த வேத வேதாந்திகளையே, தவசிரேஷ்டர்களையே தனது சந்தே கங்களுக்கு பதில் கேட்டான். மதவிசாரணை நடத்தி ஞன். சகலத்திற்கும் வேதம் விதித்தது, உபநிஷத்திலே உள்ளது என்ற பாணியில் கூறினரே தவிர, விஷய விளக்கமாய் இல்லை.

"சகலரும் மக்கள் தானே! சண்டாளர் என்ருேர் கூட்டம் ஏன்? நால் வருணம் நாட்டிற்குத் தேவை தாஞே?" என்ருன்.

"நாதன் கட்டளை அது! வேதமும் கீதையும் அப் படித்தான் சொல்லுகின்றன" என்ற அதே பதில் தான் கிடைத்தது.

"மிருகங்களும் உயிர்தானே! யாகத்தின் பேரால் ஊமைப் பிராணிகளைச் சித்திரவதை செய்வது உன்மத் தச் செயலல்லவா? அன்பிற்கு வெட்டும் படு குழியல்லவா?

"அப்படியல்லவே! ஆண்டவனின் திருப்திக் காகவே அத்தனையும்" என்றனர்.

"அறிவு அனைவருக்கும் பொதுதானே! கீழ் ஜாதியினர் படிக்கக்கூடாது என்கின்றீரே, அநீதியல்லவா இது" என்றான்.

"சாஸ்திரம் சம்மதிக்கவில்லையே" என்றனர்.

பிராமணியத்தின் பித்தலாட்டம் புரிய ஆரம்பித்தது. நெடுநாட்கள் தவம் இருந்தபின், விரதமும் பயனில்லை. வெறுப்பும் பயனில்லை. பட்டினி போடுவதும் உடலை வாட்டுவதும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தான். வேண்டாத ஜாதி நெருப்பை மூட்டிய வீணர்களின் செயல், உயிர்களை வாட்டும் கொலை யாகங்கள், பொய்யும் புனை சுருட்டும் நிறைந்து உண்மையையும் வாய்மையையும் பலியிடும் கற்பனைக் கதைகள், நயவஞ்சகர்களின் ஒழுக்க மற்ற நரிக்குணம், இவையாவும் கண்ணிலும் கருத்திலும் பட ஆரம்பித்தது.

துணிந்து ஓர்நாள், "பட்டினி விரதத்தில் பயனில்லை தெம்புள்ள தேகத்தில் தான் திறமையுள்ள மூளை இருக்கும்; தெளிவுள்ள அறிவு பிறக்கும் என்று தனது சீடர்கள் முறையிலே இருந்த துணைவர்களிடம் கூறினான். பட்டினி விரதத்தை விடுத்து நல்ல உணவு கொள்ள" ஆரம்பித்தான். அவர்கள் கோபித்து இவனை விட்டகன்றனர்.

பிறகு இவைகளை உதறிவிட்டு, கங்கை நதி தீரத்திலே உலவினான். அவனது சிந்தனை வேலை செய்து கொண்டே இருந்தது. இறுதியில் அறிவுத் தெளிவு—அறிவு ஒளி கிடைத்தது. இதைத்தான் 'ஞானோதயம்' என்று மெருகிட்டனர்.

தனது இலட்சியத்திற்கு அவனால் உருவந்தர முடிந்தது.

"மனிதரிலே பேதமில்லை. சகலரும் சமஉரிமை பெற்றவர். தன்னலம் அகற்றப்பட வேண்டும்; பிறர் நலம் பேணும் உள்ளம் வேண்டும், மாநிலத்தில் மற்றவர் துயரத்தைக் களையும் தொண்டுள்ளம் மலரவேண்டும். எண்ணம், சொல், செயல் இவைகளிலே தூய்மை தவழ வேண்டும். அனைத்துயிரிடத்தும் அன்பு மலரவேண்டும் உண்மை காக்கப்படவேண்டும் ஒழுக்க வாழ்வு ஓங்க வேண்டும். சுயநல ஆசைகள், தான் வாழவேண்டும் என்ற தருக்கு, தகர்க்கப்படவேண்டும். ஆத்மா என்றதில்லை. அறியாத ஆண்டவனைப் பற்றிய கவலை தேவையில்லை. அறிவை நம்பு; அதன் வழி நட" என்றான் அவன். அவன் பெயர் புத்தன்.

கி. மு. ஆறும் நூற்றாண்டு, இமயமலைச் சாரலிலே கபிலவாஸ்து என்றோர் நகரம். அதைச் சுற்றி ஒரு நாடு நாட்டின் மன்னன் சுத்தோதனன். அவன் மைந்தன் சித்தார்த்தன். பத்தொன்பது வயது நிரம்பிய வசீகர வாலிபன். நாட்டின் இளவரசன். அவனுக்கு யசோதரை என்ற அன்பு மனைவி, அழகுக் குவியல்; அலங்காரமான அரண்மனை வாழ்வு. ஆனந்தத்தின் உறைவிடமாய் இலங்கியது. அவனது மாளிகை, மலர் குலுங்கும் பூந்தோட்டம். அதன் நடுவே தாமரைத் தடாகம். ஆடம்பரம்; ஐஸ்வரியம்; அந்தஸ்து அவ்வளவும் அவனுக்கு இருந்தது. துன்பம், துக்கம், துயரம், அல்லல் இவை போன்ற சொற்கள் அவன் அறியாத வார்த்தைகள். சொர்ணமயமான மாளிகை தெரியும், அவன் ஆசைக் காதலியின் சுந்தர வதனம் தெரியும். அவ்வளவு சொகுசான வாழ்வு இன்பப் பொய்கையிலே மூழ்கி மூழ்கித் திளைத்தான். அம்ச தூளிகா மஞ்சத்திலே யசோதரையின் அரவணைப்பிலே சொக்கிக் கிடந்தான், பல நாட்கள். அவளது புன்னகை அவனுக்குப் போதை தரும்.

அவளது அகன்ற விழிகளிலே வழிந்த கனிவு, அவள் மொழிகளிலே இருந்த குழைவு உலகின் ஒப்பற்ற இன்பக் களஞ்சியம் இங்கே குவிந்து கிடக்கிறது என்று அவனது உள்ளத்திற்குச் சொல்லும். அவனது அன்பு வாழ்விற்கு அடையாளச் சீட்டுப்போல் யசோதரைக்கு ஓர் ஆண் குழவியும் பிறந்தது. தங்கக் கட்டி போன்ற அந்தப்பிள்ளை அமுதிற்கு ராகுலன் என்று பெயர் சூட்டினர். அரண்மனையைச் சுற்றி உயரமான மதிற் சுவர்கள்—இளவரசன் கண்ணிலே வெளியுலக வேதனை வாழ்வு தெரியக்கூடாது என்பதற்காகக் கடுமையானக் கட்டுக்காவல்; அவ்வளவும் அரசன் ஏற்பாடு. சித்தார்த்தனும், உலக முழுதும் சிங்கார வாழ்வு நடத்தும் என்றுதான் நினைத்தான், வெளியுலகம் தெரியாத காரணத்தால். அதற்காகவே "சிங்காரச் சிறை"யிலே அவன் வீட்டில் இருந்தது. ஆனால் அவனது சிந்தனையை எப்படிச் சிறையிடுவது? மாளிகை மண்டபங்களைத் தாண்டி, மதிற்சுவர்களைத்தாண்டி, அகழிகளைத் தாண்டி, கோட்டை கொத்தளங்களைத் தாண்டி "தீனி" தேட ஆரம்பித்தது. அவனது எண்ணத்திலே முதலிலே சிறு சிறு சிந்தனைப் பொறிகள். இதுதான் இன்ப வாழ்வா? எல்லோரும் பெற்று மகிழ்கிறார்களா? வாழ்க்கை என்பது என்ன? ஆரம்பம்—முடிவு பற்றிய வரலாறு என்ன? வாழ்வின் இலட்சியம் எப்படிப்பட்டது? மக்கள் வாழ்க்கை முறை எப்படி அமைந்துள்ளது என்றெல்லாம் எண்ண ஆரம்பித்தான். சிறு பொறியாக இருந்தது, பெருந்தீயாக மாற ஆரம்பித்தது. அவன் மனதிலே பெரிய புயல், போராட்டம், கொந்தளிப்பு. மக்களின் பிரச்னைகளைப் பற்றி ஆராய ஆரம்பித்த அவனுக்கு, நாட்டின் நிலைமை பற்றிப் படப்பிடிப்பு நன்றாகக் கிடைத்தது.

கங்கைச் சமவெளி—பிராமணீயம் பெருமையுடன் கொலுவீற்றிருந்தது. நாட்டிலே நால்வருணம், அதிலே

மேல்வருணம் பிராமணர்கள். அவர்கள்தான் பூதேவர் கள்; பூசுரர்கள் ஆண்டவனின் பிரதிநிதிகள், அருளைப் பெற்றுத்தர இருப்பவர்கள்; நாடாண்ட வேந்தனுனாலும் அவர்கள் சுட்டுவிரல் ஆடினால் ஆடியாகவேண்டும். அரண்மனையிலே அவர்களுக்கு அமோக செல்வாக்கு. மன்னுதி மன்னனுயிருப்பான்; போரிலே புயலெனக் கிளம்பி, புலியெனப் பாய்ந்து, எதிரியை மண்டியிடச் செய்திருப்பான், நாட்டை தனது வீர ஆற்றலால் காத் திருப்பான்; வன மிருங்களைக் கொன்றிருப்பான்; தோள் வலிமையைத் தரணிக்கு அறிவித்திருப்பான். ஆனாலும் பூனை போல் பணியவேண்டியதுதான் பூசுரர் முன்பு, ஏனென்றால், அவன் "ராஜகுரு" வேதத்தின் காவலா ளர்கள்; மேல் ஜாதி; மன்னனோ கீழ்ஜாதி; அவர்கள் உப தேசப்படி நடக்கக் கடமைப்பட்டவன். காஷாயம் தரித்தோர், கமண்டலம் ஏந்திகள், ஜெபமாலை உருட்டி யோர் எங்கும் தென்பட்டனர். ஆரண்யங்களிலே பர்ணசாலைகள். அங்கே வேதத்தின் ஒலி கிளம்பிக் கொண்டிருந்தது. ரிஷிகள், ஞானிகள், தபோவனர்கள் என்று தங்களைத் தம்பட்டம் அடித்துக் கொண்டோர் யாக யோகங்களிலே ஈடுபட்டிருந்தனர். ஓமப்புகை வளர்ந்தது. யாககுண்டங்களிலே ஆடு, மாடு, குதிரை பொசுக்கப்பட்டன. ஆண்டவனுக்கு அவிர்பாகம் என்ற பேரால், சோமரசமும் சுராபானமும் அருந்தினர். ஆண்டவனுச்குப் படைப்பதாகக் கூறினர். இடியை, மின்னலை, இந்திரனை, சந்திரனை, வாயுவை, வருணனை, கதிரவனை, கங்கையை, அக்கினியை பஜித்தனர். அபி ஷேக ஆராதனைகள் நடத்தினர். பாராயணப் பாடல்கள் பஜித்தனர். மந்திர உச்சாடனங்கள் ஜபித்தனர். ஆல யங்களை எழுப்பினர்; அவைகளிலே ஆரணங்குகளாகிய நடன சுந்தரிகள் நாட்டியமாடினர். விபசாரத்தின் மூலம் வந்த பணத்தை கோவிலுக்குக் காணிக்கை தந்த னர். வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், உப நிஷத்கள் பெருகின. வேத விளக்கமும், ஆகம அருமை

யும், சாஸ்திர சம்மதமும் உபநிஷத்தின் உட்பொருளும் பேசப்பட்டன. பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த புராணக் கதைகள், அவதாரங்களின் ஆபாசத் திருவிளையாடல்களைப்பற்றிக் கூறியது. மோட்சம் நரகம் என்ற லோகங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. மோட்சம் இன்ப புரி, நரகம் துன்பக்குழி, என்று சொல்லப்பட்டது. மோட்ச லோகத்தின் வழிகாட்டி என்ற பெயரை வைத்துக் கொண்டு குருமார்களாக, அர்ச்சகர்களாக உலவினர். பிராமணியம் போதனை செய்தது, இவ்வுலக வாழ்வே பாவம் நிறைந்தது; பிறவாவரம் பெறவேண்டியதே வாழ்வின் இலட்சியம், அதற்குப் பாசத்தை பற்றை அறுத்து, ஆசைகளைக் கருக்கி ஐம்புலன்களை அடக்கி, காவியை மாட்டி, காதலை ஓட்டி, கந்தமூலம் அருந்தி கடுந்தவம் செய்ய வேண்டுமென்று, பிராமணியத்தின் முக்கிய கோட்பாடு, மறுபிறப்பு உண்டென்பது. மறுபிறப்பு என்றால், சொர்க்கத்திலே பிறப்பதாக சொல்லவில்லை, இவ்வுலகிலேயே அவரவர் செயலுக்குத் தகுந்தமாதிரி, மாடாகவோ, பன்றியாகவோ, மனிதனுகவோ, மற்றதாகவோ, பிறப்பதாக கூறியது. இந்தநிலை அவரவர் செயலுக்கு, வினைக்குத் தகுந்தவாறு அமையும் என்றது. இது விதியல்ல. இந்த வினையை கர்மம் என்றழைத்தனர். இப்படிக் கர்மத்தைக் காட்டி, மக்களின் வாழ்விலே உள்ள துயரத்தைக் களையாமல், திருப்திப்படும் மனோபாவத்தை வளர்த்தனர். மக்களும் ஆட்டு மந்தைகள் தானே. குழந்தைப் பருவத்திலேயிருந்த மனித சமுதாயம், குள்ளநரிக் கூட்டத்தின் நயவஞ்சகத்தை நம்பியது. நால்வகை ஜாதி நாதன் கட்டளை என்றனர், நம்பினர். நாலாம் சாதிக்கு, நாமகள் அருள் கிடையாது. அவர்கள் கல்வி கற்கக் கூடாது, வேத மோதினல், நாக்கை அறுக்கவேண்டும் என்றனர், அதையும் நம்பினர் நாட்டு மக்களின் வாழ்விலே, நஞ்சைக் கலக்கிய அதே நேரத்திலே, நாடாள்வோரின் அரண்மனைகளிலேயும் பிராமணியம் தனது பிடியைப் பலப்படுத்திக் கொண்டிருந்தது.

சாம்ராஜ்யங்களுக்கிடையே சண்டை மூட்டுதல், அரண்மனைக்குள்ளே அமளியைக் கிளப்புவது, கோட்டைக்குள்ளே குத்து வெட்டை உண்டாக்குவது, ஒரு மன்னனின் மகுடத்தை மாற்றானுக்குப் பறித்துத் தர சதி செய்வது, ஆகிய " சத்காரியங்களிலே " ஈடுபட்டிருந்தனர். அந்த சூதுமதியினர். அரண்மனைகளிலேயும் அந்த அளவிற்கு அவர்கள் ஆதிக்கம் புகுந்திருந்தது.

சித்தார்த்தனின் சிந்தனை ஓயவில்லை. அவனது உள்ளம் உலைக்கூடமாகி விட்டது. "நாம் மட்டும் கோலமாளிகையிலே கொஞ்சிக் குலாவி வாழுவதா? கொடுமைக்காளான மக்கள் குவயத்திலே கோவெனக் கதறிக் கிடக்கின்றனரே, குதூகலமே அவர்களுக்குக் கிடையாதா? ஏன் இந்த நிலை? இதை மாற்றக் கூடாதா? எனக்குத்தான் எத்தனை நாள் கிடைக்கும் இந்த இன்ப நிழல்" இப்படியெல்லாம் அவனது இதயத் திரையிலே எண்ணங்கள், வர்ணந் தீட்டின. " கொடுமை களையப்படவேண்டும், குவலயத்திற்கு கொள்கையைக் கொடுக்கவேண்டும் " என்ற குன்றாத உறுதி அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

பூசுரகுலத்தைச் சேர்ந்த ஓர் வேதவிற்பனர் அகப்பட்டார். அவரிடமும் இந்த வினவையே கேட்டான். அவர்வேறு விடை என்ன சொல்வார். மனைவி மக்களைத் துறந்து விரதம்பூண்டு, பட்டினியிருந்து, ஆரண்யத்திலே அலைந்து ஆத்ம சுத்தி செய்து, ஆண்டவனின் அருளைப் பெற முயல்வதுதான் வழி, இது சாஸ்திரத்தின் சாரம் என்றார். அவனுக்கு முழுத்திருப்தி ஏற்படவில்லை. ஆனாலும் உண்மை வழிகாண வேண்டுமென்ற துடிப்பு மட்டும் கொஞ்சமும் ஓயவில்லை.

காசி நகரிலே உள்ள மான்தோட்டம் என்ற மலர்ப் பூங்காவிலே, குடிலமைத்து, தனது கொள்கையை விளக்கினார். பிரிந்த துணைவர்கள் அவருடன் கூடினர்.

அவரின் கோட்பாடு, மக்களைக் கவர ஆரம்பித்தது, பலர் புத்தரைப் பின்பற்றுபவர்களாயினர். அவர்களைக் கூட்டி சங்கம் அமைத்து, கொள்கையைப் பரவச் செய்தார்.

புத்தரின் அன்பு மார்க்கம் — அறநெறிக்கு செல்வாக்குப் பெருகியது. மக்கள் மன்றத்திலே மட்டு மல்ல, மன்னர்கள் அவையிலேயும், மிகுந்த மதிப்பு ஏற் பட்டது. அசோகன், கனிஷ்கன், ஹர்ஷர், போன்ற பேரரசர்களையெல்லாம், புத்தரின் கொள்கை வழி, நடக்கவைத்தது. அசோகனாலே, கனிஷ்கனாலே, ஹர்ஷனாலே, படையெடுப்பால் நுழைய முடியாத தென்னாட்டில், புத்தரின் அறிவியக்கம் ஆமோதிப்பைப் பெற்றது.

சீனாவிலே, சையாமிலே, பர்மாவிலே, இலங்கை யிலே, ஜப்பானிலே, திபேத்திலே, புத்தரின் கொள்கை கள், பவனிவர ஆரம்பித்தன.

பகுத்தறிவின் அடிப்படைமீது கட்டப்பட்ட புத்தரின் இயக்கம், பார்ப்பனீயத்திற்கு வெடிகுண்டு. தரைமட்டமாக்க வந்த புயல். தாழ்த்தப்பட்டவரும், தர்பாசூரரும் ஒன்றுதான் என்ற கொள்கையைப் பார்ப் பனீயம் எப்படிச் சகிக்கும்? பகுத்தறிவின்படி நட, மோட்ச நரகத்தைப்பற்றிய கவலை வேண்டாம். உண்மை தேவை, கபடவேஷம் உதவாது. ஒழுக்கம் உயரவேண்டும், என்ற இந்த கருத்துக்கள் பரவினால் பிராமணீயம் பிணமாகுமே! என்ற கிலியைத் தந்தது.

உண்மையிலேயே புத்தரின் போதனை, ஓர் போர் முரசம், பிராமணியக் கொடுமைக்கு, எதிராக! சனாதனத் துக்கு விடுத்த சவால்—அறைகூவல்! நமது நாட்களி லேயே — அறிவும், விஞ்ஞானமும் வளர்ந்த ஜனநாயக நாட்களிலேயே முரடானது என்று கருதப்படுகிற கருத் துக்களை, 2400 ஆண்டுகளுக்கு முன்பு, தன்னந்தனியாக,

அதுவும் மக்கள் மடமையும், பக்தியும் பூண்டிருந்த நாட்களில் சொல்லுகிற தைரியம், ஒருவருக்கு இருந்தது என்றால், அது பாராட்டப்பட வேண்டியதும், பெருமைப்படவேண்டியதும்கூட அல்ல ஆச்சரியப் படக்கூடியது. அத்தகைய செயலைச் செய்தவர் புத்தர். புத்தருக்கு முன் ஆசியாவிலேயே. அப்படிப்பட்ட ஓர் மாவீரரை, சரித்திரத்திலே காணோம். தென் கிழக்கு ஆசியா நாடுகளின் முதல் சரித்திர புருஷர் அவர்தான். அதிலே சந்தேகமில்லை. அவரது புகழுக்கும், சிறப்புக்கும் சாட்சியாய், பல கோடி பௌத்தர்கள் திபெத், சைனா, ஜப்பான், சையாம், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலே காணப்படுகிறார்கள்.

ஆனால், அவர் பிறந்த தாயகத்திலே, எந்தக் கொள்கைக்காக, எந்த இலட்சியம் நிறைவேற, புத்தரின் தியாக வாழ்வு மேற்கொள்ளப்பட்டதோ, அது நிறைவேறவில்லை என்றுதான் கூறவேண்டும். பிராமணியம், புத்தரை மதத் தலைவராக்கி, அவதாரத்திலே சேர்த்துவிட்டது. அவரைச்சுற்றியும், புண்ணியக் கதைகளைப் பெருக்கிவிட்டது. புத்தர் வழிகாட்டி என்ற "ஹீனயானம்" போய் புத்தரே கடவுள் என்ற "மஹாயானம்" தந்திரக்காரர்கள் புகுத்தப்பட்டது. எதற்காக புத்தரின் போதனை பிறந்ததோ அதன் உயிரைப் பறித்துவிட்டு, உடலை மட்டும் வைத்துக் கொண்டனர். வெறும் உருவத்தில், மயங்கினரே தவிர, அதன் உண்மை மறைக்கப்பட்டுவிட்டது. எனவே தான் நாட்டிலே 2400 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கேடுகள், இன்றும் இருக்கக் காண்கின்றோம்.

கேடுகளை ஒழிக்கும் முயற்சியும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு தான் வருகிறது. ஆனால் பௌத்த மதம் என்ற பெயரிலே சொல்ல முடியாது. காரணம் மெல்ல மெல்ல புத்தரின் கொள்கைகளை மதமாக்கி, பிராமணியத்திற்கும் பௌத்தத்திற்கும் வேறுபாடின்றி

தங்கை நிலைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். எனவே தான், அறிவின் தூதர்கள் அணிவகுப்பிலே தலைமை வகிக்கவேண்டிய புத்தரை, அவதாரங்களின் பட்டிய லிலே சேர்ந்துவிட்டார்கள். இந்த அவமானத்தை மாநிலத்திலே எந்த நாட்டிலும் காணமுடியாது, இந்த விசித்திர பூமியைத்தவிர! புத்தர் விழாவிற்கெல்லாம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பும் பெருந்தலைவர் அம்பேத்கார் பௌத்த மதத்தில் சேர்கிறேன் என்று சொல்ல ஆரம்பித்தால், திடுக்கிடுகிறார்கள் — திகைக்கிறார் கள்! காரணம் பார்ப்பனீயத்திலே அவர்களுக்குள்ள பற்றும், பாசமும் தான். அண்மையிலே நடந்த புத்தர் விழாவிலே பேசுகிற நேரத்தில், அறிஞர் அம்பேத்கார் பிராமணீயத்திற்கும் பௌத்தத்திற்கும் உள்ள வேற்றுமைகளை ஆராய்ந்து சீர் தூக்கிப் பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆராய்ந்து பார்க் காமலேயே அப்பட்டமாகத் தெரிகிற ஒன்றிற்கு அவ் வளவு திரையிட்டிருக்கிறார்கள், பார்ப்பனீயத்தின் பாது காவலர்கள். பார்ப்பனீயம் புத்தரின் கோட்பாடுகளை அழித்துவிட்டது என்று நாம் கூறுகிற நேரத்தில், நம்மை வகுப்புவாதிகள், பிராமணீயவைரிகள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர்களாலேயே ஒப்பற்ற சரித்திரப் பேராசிரியர் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட வரும், பேரறிஞருமான காலஞ்சென்ற எச். ஜி. வெல்ஸ் அவர்கள் "உலகத்தின் சுருங்கிய வரலாறு" (Short History of the world) என்ற நூலில் குறிப்பிட்டுள்ள, பொன் கருத்துக்களைப் பாருங்கள், பிறகு தீர்ப்பு கூறுங்கள்.

"புத்தரின் வெளிப்படையான, தெளிவான போதனைகளுக்கு எப்பொழுதுமே இந்திய சமூக வாழ்விலே தலைமையாகவும் உரிமைகள் அனைத்தையும் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்ட குருமார் சாதியான பிராமணர்கள் எதிர்த்தே வந்தனர். புத்தரின் செல் வாக்கைக் கொஞ்சம் கொஞ்சமாக இந்த பூமியிலிருந்து

ஒழிந்துவிட்டனர். இந்து மதத்தின் பழய கொடூரக் கடவுளர்கள், எண்ணிறந்த தத்துவங்கள், கோட்பாடு கள், மீண்டும் பீடமேறிக்கொண்டன. சாதி முறை சிக்கலானதாகவும் கொடுமையானதாகவும் மாறிக் கொண்டது. பல நீண்ட நூற்றுண்டுகள் புத்தமும், இந்து மதமும் ஒருங்கு செழித்து வயர்ந்தன. பிறகு சிறிது சிறிதாக, புத்தமதம் அழிந்துவிட்டது. பார்ப் டணீயம் பல்வேறு வடிவங்களிலே அதன் இடத்தைக் கைப்பற்றிவிட்டது.”

வெல்ஸ் சொல்கிருர்; வீணரின் கூடாரமாம் பிராமணீயம், வித்தகரின் பாசறையான புத்த மதத்தை விழுங்கிவிட்டது; வேண்டுமென்றே, திட்டமிட்டு, சதி செய்தது என்று! நாமும் அதையேதான் சொன்னேம்- சொல்கிரேம். எனினும் பார்ப்பணீயம் திமிரோடு நம்மைப் பார்க்கிறது, சிரிக்கிறது, கேலியோடு!

————

மார்ட்டின் லூதர்

மார்ட்டின் லூதர்! (Martine Luther) இந்தப் பெயரைக் கேட்கவே மாதா கோவில்கள் மருண்டன. பாதிரிமார்கள் பதைபதைத்தனர். நடுங்கிய அவர்கள் நாவிலிருந்து நாசக்காரன், நாஸ்திகன் என்ற நஞ்சுச் சொற்களை உமிழ்ந்தனர். ஒழியமாட்டாஞ ஊரைக் கெடுக்கும் இந்த உளறு வாயன் என்று உறுமினர், சமூகப் பிரஷ்டம் என்றனர், அவன் சாயவில்லை. சாம்பலிடுவோம் உனது ஏடுகளை என்றனர். அவன் சளைக்கவில்லை. சாவு நாங்கள் அளிக்கப்போகும் சன்மானம் என்றனர். அவன் சஞ்சலப்படவில்லை. சளையாது தனது சண்டமாருத பிரசாரத்தைத் தொடங்கினுன். அவனது ஆணித்தரமான, பொருட்செறிவுள்ள, அறிவு விளக்கத்தின் முன்பு ஆண்டவனின் பிரதிநிதிகள் என்று ஆர்ப்பரித்த அந்த நாட்டு "அர்ச்சகர்கள்" அலறினர். கத்தோலிக்க குருமார்கள் கதி கலங்கினர். ரோமாபுரி குருமூர்த்தி, போப்பாண்டவர் புயலெனக் கிளம்பினுர், இந்தப் புது உலகதூதனை, புரட்சிவீரனை-அல்ல. அவர் கருத்திலே, புல்லனை, பொல்லாங்குக்காரனை, மத விரோதியை, மகேஸ்வரனுக்கு மாசு கற்பிக்க வந்த மாபாவியைப் போசுக்க! அவர் பக்கத்திலே உறுதுணையாக நின்றவன் மன்னர் மன்னன் ஐந்தாம் சார்லஸ். சாம்ராஜ்யத்துக்கு அதிபதி. சாமான்யனல்ல. ஸ்பெயின் நாட்டு மகுடபதி. இத்தாலிய மண்டலம் முழுதும் அவன் குடைக்கீழ் இருந்தது. அலைகடலுக்கு அப்புறமுள்ள அமெரிக்கப் பிராந்தியங்களில் அவன் அரசின்

ஆணை! அப்பேர்பட்ட பேரரசன் சார்லஸே ஆண்டவனுக்கு எதிராக நடந்த அக்ரமக்காரன், வேதநிந்தகன், விதண்டாவாதி மார்ட்டின் லூதரை வேரறுக்க, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கனல்கக்கும் கண்களுடன் ஆயத்தமானுன். அவனது அடக்குமுறை பாணங்களைக் கூர்மையாக்கினுன். அவனது விசித்திர நடவடிக்கைகள் அபாய அறிவிப்புகளாயின!

அந்த மாவீரனு இந்தச் சலசலப்புக்கு அஞ்சுபவன். ஐரோப்பிய நாடுகள் அத்தனையும் போப்பாண்டவர் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடின. அப்படிப்பட்ட அவரின் மதப் பிரஷ்ட உத்தரவுத்தாளை மத்தியானத்திலே பல மக்கள் முன்னிலையில் ஏளனமாக நெருப்பிலிட்டு எரித்தான். அவனை சித்திரவதை செய்ய, சிறைபிடிக்க செய்யப்பட்ட முயற்சி ஏராளம். அவன் மீது சுமத்தப் பட்ட பழி, தூஷணை, வசைமாரி கொஞ்சநஞ்சமல்ல. ஆனுல் அவனே இவைகளைக்கண்டு குறுநகை புரிந்தான். தனது பணியைத் தொடர்ந்து செய்தான். தனது வேலை நிச்சயமாக வெற்றிபெறும் என்ற நம்பிக்கை அவனுக்கு. தான் கூறுவதிலே நியாயம் இருக்கிறது, நேர்மை இருக் கிறது. உண்மை இருக்கிறது, ஊராருக்குத் தேவையான நன்மை இருக்கிறது என்றேனும் ஒரு நாள் குவலயம் தனது கொள்கையை ஏற்கும் என்ற குலையாத நம்பிக்கையும் குன்ருத உறுதியும் அவனுக்கு இருந்தது.

மக்கள் மனதிலே கொஞ்சம் கொஞ்சமாக மார்ட்டின் லூதரின் கருத்துக்கள் தவழ ஆரம்பித்தன. காரணம் குருமார்களின் கோலாகலங்கள் அவர்கள் கண் முன் தெரிய ஆரம்பித்தன. ஆண்டவனுக்கும் ஆத்மாவுக் கும் தொடர்பேற்படுத்த வேண்டிய அவர்கள் ஆடம்பர வாழ்விலும் அலங்கார வைபவங்களிலும் ஆழ்ந்தனர். ‘பரலோகத்துக்கு வழிகாட்டி’ என்று தாங்கள் பெற்ற பட்டம் பதவிகளின் போர்வையிலே பட்டத்தரசரும்

பொருமைப்படும் பரிமள வாழ்விலே புரண்டனர் அந்த மமதையாளர்களின் மந்தகாச வாழ்வு, வெளிக்கு வேதாந்தியாய் நடித்து வேறு இடத்திலே அவர்கள் செய்த லீலா விநோதங்கள் சன்மார்க்கத்திற்காக அமைக்கப்பட்டிருந்த செளகரியங்களை, சொந்த லெளகிக சுகபோகங்களுக்காக விபசாரம் செய்த விசித்திரம் மடாலயங்களுக்கு இருந்த மலை போன்ற செல்வம், ஏராளமான நில புலன்கள், கர்த்தரின் பெயராலே மேலும் மேலும் காணிக்கையாகப் பெற்ற காசு, வரியின் பெயரால் மக்களைச் சுரண்டிய சூது, அரசியலிலே ஆதிக்கம் செலுத்த விரும்பிய அந்த ஆலயவாசிகளின் ஆணவம், மெளடீகத்தை, குருட்டு நம்பிக்கையை, கொள்முதலாக வைத்து அவர்கள் செய்த வஞ்சகவாணிபம், பித்தலாட்டப் புரட்டு — இவை அத்தனையும் காலமெல்லாம் கண்மூடிக்கிடந்த கத்தோலிக்க பக்தர்களின் கண்ணிலும் கருத்திலும் பட ஆரம்பித்தன மறுமலர்ச்சி இயக்கமெனும் அருணோதய நேரம். எங்கணும் பகுத்தறிவு ஒளிக்கிரணங்கள் வீசிய தருணம். ஏன, எதற்கு, எப்படி என்ற வினாக்கள் விசாரணையறிவை எழுப்பிய காலம். எனவே வீணான சம்பிரதாயங்கள் பல சரிந்தன, வைதீக பழக்க வழக்கங்கள் பல தவிடுபொடியாயின, மறுமலர்ச்சி இயக்கம் மலர இருந்த மதப் புரட்சிக்கு விதை தூவியது.

இந்த நேரத்தில்தான் டெட்சல் (Tetzel) என்ற பாதிரி பாவமன்னிப்புப் பத்திரங்களை விற்பதற்கு ஜெர்மனியிலே தோன்றினான். பாவமன்னிப்புப் பத்திரங்கள் என்பவை மனிதர் செய்த பாவத்தைத் தொலைக்க மடாலயங்களுக்குப் பணத்தைப் பரிசாக அளித்துப் பாதிரிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட சீட்டுக்கள்! இதன் பொருள் இலஞ்சம் கொடுப்பதன் மூலம் ஆண்டவன் சந்நிதானத்திலே தான் செய்த குற்றத்தை ஏமாற்றி விடலாம் என்பது. இந்த வெட்ககரமான ஏற்பாட்டால்,

செல்வக்குவியல் ஒன்றையே லட்சியமாகக் கருதிய போப்பாண்டவர்கள் பலமுறை குற்றஞ்செய்த படு மோசக்காரர்களுக்கும், அக்ரமத்தின் சொரூபங்களுக்கும், அநியாயத்தின் எல்லையை எட்டிப் பிடித்தவர்களுக்கும், பாவ மன்னிப்புப் பத்திரங்கள் விற்பதை வியாபார முறையாகக் கொண்டனர் இந்தக் கேவலமான நடவடிக்கை மார்ட்டின் லூதருக்குக் கோபாவேசத்தை உண்டுபண்ணியது. டெட்சல் என்ற பாதிரி பாவமன்னிப்புப் பத்திரத்துடன் ஜெர்மானிய மண்ணிலே தோன்றியதுப், அந்தநாள் அறிஞர் வழக்கப்படி 95 மறுப்புக்கள் அடங்கிய ஆராய்ச்சி ஏட்டை விட்டன்பர்க் தேவாலய வாயிற்கதவில் ஆணியில் அடித்துத் தொங்கவிட்டான். அவனது காரனங்களை யார் வேண்டுமானாலும், எந்த மதிவாணர் வேண்டுமானாலும் மறுக்கட்டும் என்று சவால் விட்டான்; அறைகூவியழைத்தான்.

ஆரம்பத்திலே பாவமன்னிப்புப் பத்திரங்களை எதிர்ப்பதே லூதரின் கொள்கையாய் இருந்தது. ஆனால் அவனது மறுபடுக்குப் பின் மலையெனக் கிளம்பிய எதிர்ப்பும், ஏளனமும், பாவமன்னிப்புப் பத்திரம் மாத்திரமல்ல, பாதிரிமார்களின் பழமையும், போப்பாண்டவரின் சர்வாதிகாரமும், கத்தோலிக்க மதத்தின் கண்மூடித் தத்துவங்களும் எனது கண்டனத்துக்கு உரியவை எனக் கர்ஜிக்கச் செய்தன. போப்பின் தலைமைப் பீடத்தைத் தரைமட்டமாக்க வேண்டுமென்பது அவனது தணியா வேட்கை. தருக்கு நிறைந்த அவர்களின் தகுதியின்மையைத் தரணிக்குத் தம்பட்டம் அடித்தான். மருண்ட மதத்தலைவர் போப்பாண்டவர் தான் மதப் பிரஷ்ட உத்தரவை நீட்டினார். அதைத்தான் நெருப்புக்கு விருந்தாக்கினான் வீரம் நிறைந்த வித்தகன்!

மன்னர் மன்னன் சார்லஸ் மார்ட்டின் லூதரின் முயற்சியைக் கண்டு மருண்டான். மதச்சபைகள் பல

வற்றைக் கூட்டினான். இவனது ஏடுகளை எரியுங்கள் என எக்காளமிட்டான். இவனைக் கொல்ல வேண்டுமென்று கொடுந் தீர்மானமும் செய்தான். ஆனால் லூதரோ சாக்ஸனி இளவரசனிடம் அடைக்கலம் புகுந்தான். மார்ட்டின் லூதர் மறைந்து வாழ்ந்தானே தவிர அவனது கொள்கைகள், நாடு, நகரமெங்கும் பட்டி, தொட்டிகளிலெல்லாம் பரவத் தொடங்கின. மன்னர் மாளிகைகளிலே, மண் குடிசைகளிலே, ஏழைப் பாமர மக்களிடையே, போர் வீரர்களிடையே, மாணவர்களிடையே — எல்லோரிடையேயும் இவனைப் பற்றியே பேச்சு. இவனது கொள்கைகளைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் சாலைகளிலே, சோலைகளிலே, வயற்புறத்திலே, வாய்க்கால் ஓரத்திலே, பல்கலைக் கழகங்களிலே, கடைத் தெருக்களிலே, கண்ட கண்ட இடங்களிலெல்லாம் லூதரின் இருதயகீதம் எதிரொலித்தது. மார்ட்டினைப் பின்பற்ற ஆயிரக்கணக்கில் அணி அணியாய் மக்கள் திரண்டனர். பழமைக்குச் சவக்குழி வெட்ட, புத்துலகம் சமைக்க, பலர் கிளம்பினர். 'மார்ட்டின் லூதரின் கோட்பாடு வாழ்க' என்ற ஒலி எங்கும் பரவியது.

இவனுக்கு முன்பு சில பலர் இதே காரணங்களுக்காகப் போராடியுள்ளனர். வாழ்நாள் அத்தனையும் அர்ப்பணித்துள்ளனர். கொடுமை பலவற்றை அநுபவித்துள்ளனர். அவர்களுக்கு ஏற்படாத செல்வாக்கு லூதருக்கு ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டிலே விக்ளிப் (Vycliffe) எனும் விவேகி கிளம்பிக் கத்தோலிக்க மதத்தின் பல தவறுகளை, மதத் தரகரின் பல புரட்டுகளை மக்கள் மன்றத்தின் முன் முழக்கினான். எனவே இவனை ஐரோப்பிய வரலாற்றிலே "மதச் சீர்திருத்தத்தின் விடிவெள்ளி" என அழைப்பதுண்டு. இவனைப் பின்பற்றி இவனது போதனைகளை ஜான் ஹஸ்

(Johnhuss) என்ற அறிஞன் பொஹிமியா மண்டலத்திற்கு எடுத்துச் சென்றான். ப்ரேக் பல்கலைக் கழகத்திலே விக்ளிப்பின் அறிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினான். அவனது பேச்சு, படித்த பல்கலைக்கழக மக்களிடையே மட்டுமன்றிப் பாமரர் உள்ளங்களிலும் சென்று படர ஆரம்பித்தது. இதைக்கண்டு பாதிரிமார்கள் பதை பதைத்தனர். பழிவாங்க வேண்டுமென்ற நச்சு எண்ணம் அவர்கள் உள்ளத்திலே நர்த்தனம் புரிந்தது. சூழ்ச்சித் திட்டம் ஒன்று உருவாகியது மத வித்தியாசங்களுக்கு முடிவுகட்ட மதச் சபை ஒன்றைக் கூட்டினர், தனது கொள்கைகளை வலியுறுத்த ஜான்ஹஸ்ஸையும் அழைத்தனர். இவர்களின் தீய நோக்கத்தைத் தெரிந்தோ என்னவோ, வர இயலாதென மறுத்தான். ஆனால் உயிருக்கு உத்திரவாதம் என உறுதிகூறி வரச்செய்தனர். கள்ளங்கபடமற்ற அந்த அறிஞனும் கன்னெஞ்சர்களின் அவையிலே புகுந்தான். ஆனால் அங்கு நடந்ததென்ன? ஜான்ஹஸ் மத விரோதி என்று குற்றஞ் சாட்டப்பட்டு வழக்கு மன்றத்திலே குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் பட்டான். இறுதியில் அந்த உத்தமனின் உயிரும் உடலும் தீக்குண்டத்தின் கோரப்பசிக்கு உணவாகப் பரிமாறப்பட்டன. இதேகதி பிளாரெண்டைன் சீர்திருத்தக்காரன் சவனரோலா (Savonarola) என்பவனுக்கு நேரிட்டது. இத்தகைய பரிதாபகரமான சோகச் சம்பவங்களுக்குக் காரணம் மக்கள் அறியாமைத் தளைகளால் கண்டுண்டிருந்ததே, அவர்கள் சுயமாகச் சிந்தனை செய்யும் பண்பை—பகுத்தறிவின் மாண்பை உணராமலிருந்ததே.

ஆனால் மார்ட்டின் லூதரின் நாட்களிலே மக்கள் அறிவு விளக்கம் பெற்றிருந்தனர். அச்சுப்பொறி கொள்கையைப் பிரசாரம் செய்யும் அற்புத சாதனமாய் அமைந்தது. மக்களுக்கு ஆட்டு மந்தைகளாய் இல்லை. ஆராய்ச்சி அறிவின்முன் தலைவணங்கினர். பல இளவரசர்

களே மார்ட்டின் லூதரைப் பாராட்ட முன் வந்தனர். மேலும் சார்லஸ் மன்னனே அடிக்கடி போர்க்கோலம் பூண்டிருந்தான். அரசியல் அமளிகளை அடக்க வேண்டி யிருந்த அவனுக்கு அறிவுப் பிரச்சாரம் பரவுவதை அறிய முடியவில்லை. அறிந்தாலும் அழிக்க நேரமில்லை எனவே மதப்புரட்சி காட்டுத் தீயெனப் பரவியது. பல மடாலயங்கள் பூண்டோடு பூண்டாய் மறைந்தன. பல பாதிரிமார்கள் ரோமாபுரிக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பைக் கத்தறித்துக் கொண்டனர். ஆடம்பர முறையெல்லாம் அகற்றப்பட்டு எளிய வழிபாட்டு முறை தேவாலயங்களிலே கையாளப்பட்டது. லத்தின் மொழி கல்லறைக்கு அனுப்பப்பட்டுத் தாய்த் திருநாட்டு மொழியாகிய ஜெர்மானிய மொழியிலேயே மதகாரியங்கள் நடைபெற்றன

நாட்டிலே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் தீவிரவாதிகளெனச் சொல்லிக்கொண்ட சிலர் தாறுமாறான செயலுக்குத் திருப்பினர். விக்கரங்களை உடைப்பது, மடாலயங்களுக்கு தீ வைப்பது போன்ற பலாத்கார முறைகளைத் தூண்டினர். போர் வீரர்கள் பலர் ஜெர்மன் இளவரசர்களுக்கு எதிராய் திரண்டனர். இவர்கள் புரிந்த அக்ரமம் ஏராளம். தனது லட்சிய வெற்றிக்கு, மார்க்கம் பரவுவதற்கு இவை பாதகமாய், தடைக்கற்களாய் முட்டுக்கட்டைகளாய் அமையும் எனக் கலங்கினான். சிலரிடையே செல்வாக்குச் சிதையும் என்பதை உணர்ந்தும் இவற்றை வன்மையாக கண்டனம் செய்தான். காரணம் அன்பு முறையில்தான் தனது வெற்றியின் இரகசியம் இருக்கிறதென மனமார நம்பினான்.

மார்ட்டின் லூதரின் வெற்றிக்குக் காரணம் அவனிடம் அமைந்திருந்த அரிய பண்புகளே. பயமென்பது இவன் அறியாதபொருள். இவனது தோற்றம் கம்பீரமானது. சொல்வன்மையே பலரை உணர்ச்சியின்

உருவங்களாக்கியது. மலைகுலையினும் குலையும், இவனது மனம் குலைந்ததில்லை. அவ்வளவு குலையாத உறுதியும் குன்றாத ஊக்கமும் விருப்பு வெறுப்பைப்பற்றிக் கவலை கொள்ளாத பிடிவாத மனோபாவமும் இவனது இரத்தத்திலே கலந்திருந்த குணங்கள் எனவேதான் குவலயமே கும்பிட்டு வாழ்ந்த போப்பாண்டவருக்கு எதிராக வாளெடுத்தான் சிலபல நேரங்களில் வன்மையாகவும் வசை மொழி கலந்தும் பேசிவிடுவான். ஆனால் அவைகளின் அடித்தளத்திலே அவனது நேர்மைத்தன்மையும் நெஞ்சுறுதியும் ஒளி விட்டன. இவனது தாய் தந்தையரும் மூதாதையரும் குடியான வகுப்பைச் சேர்ந்தவர்கள். அந்த வகுப்புக்குரிய எளிமையை வாழ்நாள் முழுவதும் பின்பற்றினான். ஆடம்பரம் அலங்காரம் இவைகளின் கொடிய பகைவன். தெளிந்த அறிவும், பரந்த அனுபவமும் உடையவன். சிறு பிராயத்திலே, வழக்கறிஞனாக வேண்டும் என்று விரும்பிய மாதா பிதாக்களின் ஆசையிலேயே மண்ணைப்போட்டுவிட்டு மடாலயமொன்றிலே சிடுங்கி அதன் சகல முறைகளையும் நேரில் உணர்ந்தவன் அங்கே நிறைந்திருந்த ஆபாசங்கள் வெறுப்பளிக்கவே விட்டன்பர்க் பல்கலைக் கழகத்திலே பல நாட்கள் மதபோதகாசிரியனாய் அமர்ந்திருந்தான் பின்பு ரோமாபுரிக்குச் சென்று வந்தான். அவன் அங்கு கண்டதும் கேட்டதும்தான் அவனைமத எதிர்ப்பு வீரனாக்கின

எதிர்ப்புக் கஞ்சாமல், ஏளத்துக்குச் சலியாமல் தொடர்ந்து பணியாற்றினான். லத்தின் மொழிக்கு எதிராக ஜெர்மன் மொழியின் மேம்பாட்டை நிறுவியவன் இவனே. முதன் முதலிலே பைபிளை ஜெர்மன் மொழியிலே மொழி பெயர்த்தான். ஜெர்மன் இலக்கிய வானிலே மங்காத தாரகையாய் இன்னும் ஒளி விடும் உன்னத ஏடு இதுவாகும்.

மேலும் அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுபட நடத்தும் போராட்டம் அவனது அறப்போர் என முழங்கினான். " ஜர்மானிய நாடு ஜர்மானியருக்கே " என்பது

அவனது தாரக மந்திரம். இந்த விடுதலை விருத்தத்தில் உரிமை ஒலியில் ஓர் கவர்ச்சி யிருந்தது. காரணம் ஜர்மானியரின் வாழ்வு அன்னியரின் காலடியில் சிக்கி நசுங்கி யிருந்தது. அரசியல் துறையில் ஆதிக்கம் செலுத்தியவன் —சார்லஸ் மன்னன் — ஸ்பெயின் நாட்டான். மதத் துறையில் ஆதிக்கஞ் செலுத்தியவர்—போப்பாண்டவர்—இத்தாலிய நாட்டான். எனவே 'ஜர்மானிய நாடு ஜர்மானியருக்கே'' என்ற முழக்கம் நல்ல அறுவடையைத் தந்தது. மார்ட்டின் லூதரின் கொள்கையும் கோட்பாடும் ஜர்மனியைத் தாண்டி டென்மார்க், ஸ்வீடன், இங்கிலாந்து, ஸ்விட்சர்லாந்து, ஸ்காட்டுலாந்து ஆகிய இடங்களிலெல்லாம் பரவின. ஸ்விட்சர்லாந்திலே கொள்கையைப்பரப்ப நடந்த போரில் கொலையுண்ட ஸ்விங்லியும (Zwingli) கொண்டிருந்த கோட்பாட்டிற்காகப் பிரஞ்சு நாட்டைப் பிரிந்து ஜினிவாவில் வாழ்ந்த சீர்திருத்தச் சிங்கம் கால்வினும் (Calvin) ஸ்காட்லாந்திலே பிரஞ்சு ஆதிக்கத்துடன் சமர் செய்த ஜான்நாக்சும் (Johnknoz) மற்றையோரும் மாட்டின் லூதரின் பரம்பரையினர் தாம்.

புருனே

மானிட சமுதாயம் இன்றுள்ள முற்போக்கை—உன்னத நிலையை அடைவதற்கு எத்தனையோ தலைமுறைகள் கழிந்திருக்கின்றன. இன்று எவை எவை அறிவுப் புரட்சியின் பயன் என்று கூறுகிறோமோ, அவை உருவாவதற்குக் காரணமாய் இருந்த உத்தமர் பலர் பலிபீடத்திலே ஏற்றப்பட்டுள்ளார்கள். சிறையிலே சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர் தூக்கு மரத்திலே தொங்கவிடப்பட்டுள்ளனர், நாடுகடத்தப்பட்ட, நாடோடிகளாக்கப்பட்ட, நஞ்சூட்டப்பெற்ற வீரர்களின் வேதனைமிக்க வரலாறு உலக சரித்திரத்திலே ஏராளமாக உண்டு. மனித வாழ்வில் அறிவுக்கும்—சிந்தனைக்கும் பூட்டப்பட்டிருந்த விலங்குகளை ஒடித்தெறிந்த பிறகுதான் புதிய உலகம் உதயமாகியது. இந்த ஒப்பற்ற தொண்டிற்குத் தங்கள் உடல் உடமை, உயிர் அத்தனையும் அர்ப்பணித்த அஞ்சா நெஞ்சர்கள் ஆயிரமாயிரம் பேர்.

15—16ம் நூற்றுண்டுகளிலே ஐரோப்பா மண்டலத்திலே உள்ள பல்வேறு நாடுகளிலே பழமையின் சீற்றத்திற்கு—வைதிகத்தின் கொடுமைக்கு — கத்தோலிக்க மதத்தின் காட்டு மிராண்டித்தனத்திற்குத் தங்கள் உயிரைப் பணயமாக வைத்து, ஊராருக்கு உண்மையை உரைத்துத் தியாகத் தீயிலே குளித்தவர்கள் பலப் பலராவர். கலிலியோக்கள் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

நாம் கூறும் புருனே பிறந்த வேளை, ஐரோப்பா விலேயே நெருக்கடியான சமயம். பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்ட சமயம் பழைய பழக்க வழக்கங்களைப் பகுத்தறிவு உரை கல்லிலே பரிசீலனைசெய்யத் தலைப்பட்ட காலம். புதுமை யின், முன்னேற்றத்தின் வாடை எங்கும் வீசிய நேரம், இந்த கொந்தளிப்பான பருவத்திலே 1548ம் ஆண்டிலே புருனே கலாப்ரியா (Calabria) பகுதியிலே, நோலா (Nola) என்ற இடத்திலே பிறந்தான். கோள் நிலையறிந்த கோபர்னிகஸ் இறந்து ஐந்து ஆண்டுகளே ஆகியிருந்தன. நட்சத்திர மண்டலத்தைப் பற்றி அவரது கருத்துக்கள் எங்கும் நர்த்தனமாடிக் கொண்டிருந்தன. கலிலியோ வைச் சிறைச்சாலையில் பிடித்துத் தள்ளிய கடுமையான அக்கிரமம் நிகழ்வதற்கு 16 ஆண்டுகளுக்கு முன், ஏன்? ஷேக்ஸ்பியர் தோன்றுவதற்கு முன்புதான் ஜியார்டனோ புருனோ (Geordano Bruno) பிறந்தான். சுருங்கச் சொன்னால், அதிசயிக்கத்தக்க, அற்புதமாறுதல்கள் எங்கும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

அமெரிக்காவைக் கண்டு பிடித்ததினால் உலகம் விரிந்தது, கோபர்னிகஸ் தத்துவங்களின் பலனால் ஆகாய மண்டலத்திலே பல புதிய கோள்கள் காணப்பட்டன. மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை. மார்ட்டின் லூதர் இறந்து இரண்டாடுகள் முடியவில்லை. சீர்திருத்த இயக்கத்திற்கு விரோதமாய் மதவாதிகள் மார் தட்டினர். மதவிசாரணை மன்றங்கள் புதுப்பிக்கப்பட்டன. சுயமாகச் சிந்தனை செய்பவன், சுதந்திரமாகப் பேசு கிறவன் — இவர்களுக்குப் பரிசோதனைப் பருவம். ஆனால் அஞ்சாநெஞ்சர் ஆண்மையுடன் கொண்ட கருத்தைக் குவலயத்திற்குக் கூறினர்.

இந்த சூறாவளி வீசிய சூழ்நிலையிலே, மறுமலர்ச்சி இயக்கம் மக்கள் வாழ்விலே மாறுதலைப் புகுத்திய தருணத்திலே புரட்சி வீரன் புருனே ஓர் போர் வீரனின்

புதல்வனுய்த் தோன்றினுன். மூர்க்கத் தன்மையும் முரட்டுப்பிடிவாதமும் எதையும் கற்கவேண்டுமென்ற தணியாத அறிவுத் தாகமும் இவனிடம் தவழ்ந்த பண்புகள். டாமினிக்கன் பிரிவைச் சார்ந்த மடாலயத்திலே இளமையிலே பாதிரியானுன். இந்த வாலிபப் பாதிரியின் கேள்விகளும், விசாரணைகளும் இவனை ஓர் வேதநிந்தகன் விதண்டாவாதி எனச் சந்தேகிக்கச் செய்தன.

நேப்பிள்ஸ் நகர வழக்கு மன்றத்திலே இவன் மீது மத விரோதி என்று குற்றஞ் சாட்டப்பெற்று இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மன்றத்தார் முன் தோன்றுமாறு ஆணையிடப்பட்டான். இந்த விசித்திரப் பாதிரி அந்தக் கட்டளைக்குப் பணியவில்லை. ஊரை விட்டே பறந்துவிட்டான். அதுமுதல் பல்வேறு நாடுகளிலே சுற்றித்திரிந்தான். ஜினீவா பாரிஸ் ஆக்ஸ்போர்ட் ப்ரேக் போன்ற பல நகரங்களிலே தங்கினுன். ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு அடிக்கடி மாறினுன். சொற்பொழிவு, உரையாடல், விவாதம், சச்சரவு–இவைகள்தான் அவனது தொழில். இம்மாதிரி நாடோடி வாழ்க்கை அக்காலத்திலே சகஜமாய் இருந்தது. ஐரோப்பிய அறிஞர்களிடம் சமத்துவத்தின் சாயல் படர்ந்திருந்தது. படித்த, பண்புள்ள நாகரீக மக்கள் இலத்தீன் மொழியை இலாவண்யமாகப் பேசினர். படித்த மக்களைப் பல்கலைக் கழகங்கள் பரிவுடன் வரவேற்றன, உண்டியும் உறையுளும் கொடுத்து உபசரித்தன.

புருனேவின் அறிவும் திறனும் பலரது தோழமையைத் தேடித்தந்தன. பிரஞ்சு நாட்டின் மூன்ரும் ஹென்றி அவன் ஆதரவாளன், இங்கிலாந்திலே தங்கியிருந்த நேரத்திலே, பிரஞ்சுத் தூதுவரின் மாளிகையிலே விருந்தினன். அக்காலத்து அரசியல் அறிஞர்கள் பர்க்லே (Burghley), வால்ஷிங்ஹாம் (Walshingham), மெண்டோசா (Mendoza) முதலியோர் அவனுக்கு அறிமுகமானவர்கள். பிலிப்சிடனி இவனது நண்பர், ஸ்பென்

சரைக் (Spencer) கூட இவனுக்குத் தெரியும் எனக் கூறப்படுகிறது. இவனது துணிச்சலும், ஊக்கமும், தொல்லையையே விளைவித்தன. எந்த இடத்தையும் வாழ இலாயக்கற்றதாக்கிக் கொண்டான். துதி ஓர் பக்கம், தூற்றல் ஓர் பக்கம். பாராட்டுதல் ஓர் புறம், பழிச்சொல் மற்றோர் புறம், மாறிமாறிப் பரிமாறப்பட்டன.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆற்றிய சொற்பொழிவிலே தன்னைப்பற்றி இப்படி அறிவிக்கிறான்.

"தெளிந்த பேராசிரியன், ஐரோப்பிய பல்கலைக் கழகங்களின் மரியாதையையும் ஆமோதிப்பையும் பெற்ற தத்துவஞானி; அறியாமை உறக்கத்திலிருந்து அவனியோரை எழுப்பும் தூண்டுகோல், மடமை நோய்க்கு மருத்துவன், மானிட சமுதாயத்தின் பால் அன்பு பூண்டோன். இவன் ஆண், இவள் பெண் என்ற பேதாபேதம் பார்க்காதவன் இவன் இங்கிலாந்துக்காரன் இவன் இதாலியன் என்று வேறுபாடு கருதாதவன். இவன் மன்னன், அவன் மதத்தலைவன் என்ற வித்தியாசம் நினைக்காதவன். யார் யார் அன்பு, எளிமை, அமைதி, நற்குணம், இவைகளின் உருவங்களோ, அவர்கள் அத்தனை பேரையும் ஒருசேர நேசிப்பவன். கபடர்கள் என்னைக் கண்டனம் செய்யலாம், பித்தலாட்டப் பொய்மைப் பிரசாரகர்கள் பொறுமையினால் என்மீது எரிந்து விழலாம். ஆனால் நேர்மையாளர் நல்லறிவுடையோர் என்னை நன்குணர்ந்தவர்கள் எனக்குப் புகழ் மாலை சூட்டுகின்றனர்; பாராட்டுமொழி நல்குகின்றனர்."

அவன் எழுத்துக்களில் உபமான உபமேயங்கள் அணிவகைகள் அலங்கரித்தன. தத்துவங்களைப்பற்றி மிக்க எழிலமைந்த கவிதைகளிலும் உரைநடையிலும் வரைந்தான். புருனோ என்ற பெயரிலே புகழ்பெற்ற

அவன் அழகிய எழுத்துக்களினுல் ஐரோப்பா முழுதும் அறிமுகப் படுத்திக்கொண்டிருந்தான். முன்னரே நேபிள்ஸ் நீதி மன்றத்திலே இரண்டு வழக்குகளிலே குற்றஞ் சாட்டப்பட்டு அதைத் தவிர்க்க தலை தப்பி ஓடியவன், எந்த இத்தாலிய மண்ணிலே விதிக்கப்பட்ட தண்டனையைத் தவிர்க்க தலை தப்பி ஓடினுனே அதே தரணியிலே காலெடுத்து வைப்பது எவ்வளவு பைத்தியக் காரத்தனமானது! இருந்தும் விபரீதமான போக்கைக் கொண்டான். வெனிஸ் நகரிலே நுழைந்தான். அதற்குக் காரணம் வெனிஸ்மாநகரம் பல்கலையை வளர்ப்பதிலே ஆர்வம் மிக்க அழகு நகராகவும் பாதுகாப்பற்றவர் களுக்கு அடைக்கலம் அளிக்கும் கோட்டையாகவும் இருந்ததே. ஆனுல் அங்கு உறைவது எரிமலைமேல் வாசம் என்றே அவனது நண்பர்கள் எண்ணினர்.

புருனே, அங்கு சென்றதற்குக் காரணம், மொசினிகோ (Mocenigo) என்ற வாலிபச் சீமான். புருனே விடம் இவன் கொண்ட பிரியத்திற்குக் காரணம் ஞாபகச் சக்தியைப்பற்றிய சில சூட்சமங்கள் புருனேவுக்குத் தெரிந்திருப்பதாகவும், அதை எப்படியும் கற்றுத்தெளிய வேண்டுமென்ற துடிதுடிப்புமேயாகும். அந்தக் கருத்திலே புருனேவை ஆசானுய்க்கொண்டு மாணவனுய் அமைந்தான். ஆருயிர் நண்பன் போலவும் நடித்தான். ஆனுல் மொசினிகோ அசம்பாவத்தின் சொருபம், வஞ்சகத்தின் இருப்பிடம், பொருமையின் களஞ்சியம். இந்த நயவஞ்சகனின் நாசகாரச் சதியிலே புருனே மோசம் போனுன். வெனிஸ்மாநகர மத விசாரணை மன்றம் பல நாட்கள் அவன் பக்கம் தன் பார்வையைத் திருப்பவில்லை. ஓர் ஆண்டுவரை அதன் அடக்குமுறை தொடுக்கப்பட வில்லை. ஆனுல் குறுகிய மனேபாவமும் குள்ளநரிக் குணமும்கொண்ட மொசினிகோவின் உருவிலே சதிகாரத் திட்டம் தயாராகியது. எந்த சூட்சமத்தைப் புருனே விடம் கற்கலாம் என்று கனவு கண்டானே அது நிறைவேறவில்லையே என்ற சபலம். புருனேவைப்

புரட்டன் என்று கருதிய அவன் தந்தை தந்த போதை வழக்கு மன்றத்திலே உறுப்பினனாய் இருந்ததால் பழக்கப்பட்டிருந்த வஞ்சகத் திட்டம்—இவை அத்தனையும் மொசினிகோவைத் தன்னை நம்பிவந்த வீரனைக் காட்டிக் கொடுக்கச்செய்தன. 1592-ம் ஆண்டு மே-மாதம் 23-ம் நாள் எந்த மோசினிகோ வெனிஸ் நகரிலே அவனுக்கு வரவேற்பளித்தானோ, வாஞ்சையுடன் அதுவரை காத்திருந்தானோ அவனாலேயே கைது செய்யப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டான்.

புரூனோவின் வழக்கை விசாரிக்க இருந்த வெனிஸ் மத மன்றம் பலபுதுமைகளைக்கொண்டது. அதனுடைய விதிகள் விலங்குக் காலத்தை நினைவூட்டத் தவறாது. வேதனையூட்டும் முறைகள் அங்கு வாடிக்கையாக அனுசரிக்கப்பட்ட நடவடிக்கைகள். குற்றவாளி பொதுமண்டபத்திலே வாதிப்பதோ சாட்சிகளை அவையின்முன் நிறுத்தி சாட்சியம் கேட்பதோ, குறுக்கு விசாரணை புரிவதோ குற்றவாளியின் சார்பில் வாதாட வழக்கறிஞர் அனுமதிக்கப்படுவதோ, குற்றமற்ற தன்மையை நிறுவ சாட்சிகளை அழைப்பதோ அங்கு நடைபெறமுடியாத சில காரியங்கள்.

1592 மே மாதம் 23-நாள் நீதி மன்றத்தின் முன் "என் மனசாட்சியின் தூண்டுதலும் எனது தந்தையின் கட்டளையும் இவனை இம்மன்றத்திலே ஒப்புவிக்க நிர்ப்பந்தித்தன. இவன் ஓர் மத விரோதி, ஏற்கனவே ரோமாபுரி மத விசாரணை மன்றத்துடன் மல்லுக்கு நின்று மறைந்து ஓடியவன், எனது வாதத்திற்கு அரண் செய்ய அவன் எழுதிய ஏடுகளின் பிரதிகள் என்னிடம் உள்ளன. சாட்சிகளும் ஏராளமாக உண்டு." இவன் பல நேரங்களிலே என்னிடமே இந்த மன்றத்தைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும் மதிப்புக்குறைவாகப்பேசிய மாபாதகன், இவை

களிடம் தனக்கு அச்சமில்லை என்று ஆர்ப்பரித்த அக்ரமக்காரன்" என்று குற்றச் சாட்டுகளைக் கூறினான் மொசினிகோ.

விசாரணை ஆரம்பமாகியது. ஏறக்குறைய நாலு மாதங்கள் வழக்கு தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. அதன் சம்பிரதாயத்திற்கு ஏற்ப சாட்சிகள் பலர் குற்றவாளிக்குச் சம்பந்தமில்லாமல் விசாரிக்கப்பட்டனர். குற்றத்திற்குச் சாதகமாக ருசுகரத்தகவல் ஒன்றும் அகப்படவில்லை. யாரோ ஒருவன் மட்டும் புருனோவுக்கு மதம் கிடையாது என்பதைத் தான் அறிவதாகக் கூறினான். கடைசியாகக் கைதியிடம் செய்திகளைத் திரட்ட வருணனைக்கு அகப்படாத கொடூரம் நிறைந்த பல வழிவகைகளையும் முறைகளையும் கையாண்டனர்.

கோர்ட்டின் முன்னிலையில் புருனோ கொண்டுவரப்பட்டான். அவன் மேலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் தேவை என்று கட்டளை பிறந்தது. புருனோ அவன் வாழ்வின் அத்தியாயங்களை விவரித்தான் அவன் சஞ்சாரம் செய்த நாடுகள், அவன் சிந்தனையின் விளைவான ஏடுகள் அத்தனையையும் பற்றிக் கூறினான். தனது தத்துவ விசாரணையிலே எவை எவை நியாயம் உண்மையெனப்பட்டதோ அவற்றையே தனது நூல்களிலே தீட்டியிருப்பதாக உரைத்தான். கத்தோலிக்க மதத்தைத் தாக்கவேண்டுமென்ற ஆசையாலோ, தகர்த்துத் தரைமட்டமாக்க வேண்டுமென்ற கருத்தாலோ தனது பேச்சோ, எழுத்தோ அமைந்ததல்ல என்று விளக்கிக் கூறினான். இவனது விளக்கமோ ஆணித்தரமான மறுப்போ அந்த மந்தகாச வாழ்வினரின் காதிலே ஏறவில்லை. மேலும், மேலும் கோர்ட்டார் அவனது கொள்கைகளைப்பற்றியும் குறுக்கு விசாரணை புரிவதிலும் நூல்களையும் கொள்கைகளையும், தமது சுயநலமென்னும் உரைகல்லில் இட்டுப் பார்ப்பதிலும் நாட்களை ஓட்டினர். ஆனால் உண்மையைக் கூற வேண்டுமானால் இவனது கொள்கையைப் பற்றியோ, நூல்களைப் பற்றியோ ஆராயும்

அறிவு. ஆண்டவனைக் காப்பாற்ற அவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்ட அதிசய புருஷர்களுக்குக் கிடையாது.

இந்தச் சங்கர்ப்பத்தில் வேதனையின் உருவமானுன் புருனே. அவனது நாடி நரம்புகளெல்லாம் தளர்ச்சியுற்றன. சிறைச்சாலையின் சித்திரவதைகள் அவனது உள்ளத்தையே உளிகொண்டு உடைப்பதுபோல் இருந்தன. பயங்கர எண்ணங்கள், சோக முடிவுகள், இவையே அவனது இதயத்திலே நிழலிட்டன.

இந்தச் சமயத்தில் ரோமாபுரி மதத்தலைவர் குழு புருனேவை ரோமாபுரி வழக்கு மன்றத்தின்முன் விசாரிக்கப்பட அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இதைப்பற்றி விவாதிக்க வெனிஸ்செனட் கூடியது. சிலர் வெனிஸ் தீர்ப்பளிக்கட்டும் என்றனர். வேறு சிலர் ரோமுக்கு அனுப்பிவிடலாம் என்றனர், இதைப்பற்றிய சர்ச்சை பலமாக நடந்தது "புருனே வெனிஸ் நகரத்தவனல்ல. ரோம் நகரிலே ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டவன். எனவே அவர்களிடம் ஒப்படைத்தலே நியாயம்" என்பது ஒரு சாரார் வாதம், "ஆண்டவனுக்கு எதிராக குற்றஞ் செய்கின்ற அக்கிரமக்காரன் அவனியிலே எந்த இடத்திலே தண்டிக்கப்பட்டாலும் தகும். தவறல்ல, முறையானது' என்பது மற்ருேர் சாரார் முடிவு. எப்படியோ இறுதியாகப் போப் பாண்டவரின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டான். அந்தத் தேதியிலிருந்து அவனைப் பற்றிய விவரம் ஒரு புதிராகவே உள்ளது. வெளியே தெரிகின்ற ஒரே செய்தி 1593-முதல் ஆருண்டுகள் சிறையிலே கிடந்து சீரழிந்தான் என்பதே இந்த ஆருண்டுகள் அவன் இருந்த நிலைமை —வழக்குத் தாமதத்திற்குக் காரணம் முதலியவற்றைப் பற்றிய உண்மைகள் தெரியவில்லை. ரோம் நகரிலே அக்காலத்திலே தங்கியிருந்த ஜெர்மானிய அறிஞர் சியோப்பியஸ் (Cioppius) தொகுத்துள்ள நூலிலே அவனைப்பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.

அக்காலத்தில் பல தடவை மதகுருமார்களால் விசாரணை செய்யப்பட்டான். தவறை உணர்வதாக ஒத்துக்கொண்டால் தயை புரிவோம் என்றனர். புருனேவோ தவறை உணர்ந்தவன்போல நடித்து மீண்டும் மீண்டும் அவர்களைத் திணறவைத்தான். இறுதியாக, அறிவு, அனுபவம், ஆராய்ச்சி, சட்ட நிபுணத்துவம் ஆகியவைகளில் நிகரற்ற மத வாதிகள் நீதிபதிகளாய் அமர்ந்து, புருனேவைப்பற்றி தீர்ப்புக் கூறினர். தீர்ப்பிலே அவனது வாழ்க்கை, படிப்பு, போதனை, அவனது தவறைத் திருத்த தந்தையின் பரிவுடன் முயன்ற அரசாங்கத்தின் கவலை! முதலியவை எடுத்துக் கூறப்பட்டிருந்தன. மேற்கண்டநிலையில் துன்பப்படுத்தப்பட்டு, மதப் பிரஷ்டம் செய்யப்பட்டு, இரக்கமற்ற தண்டனை விதிக்கப்படுவதற்கு தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவனான புருனேவை "உயிருடன் தீயிலே இட்டுப் பொசுக்க வேண்டும் என்று இந்தக் கோர்ட் உத்தரவிடுகிறது" என்பதே தரப்பட்ட தீர்ப்பு. இந்த மொழிகள் படிக்கப்பட்டவுடன் மண்டபம் முழுதும் பேச்சு மூச்சில்லை. அங்கு ஆட்சிகொண்ட கொடூரமான நிசப்தத்தை கிழித்துக் கொண்டு 'எனது அன்பார்ந்த நீதிபதிகளே! இந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்ளப்போகும் என்னைக் காட்டிலும் மிகுந்த பயத்துடன் நீங்கள் இத்தீர்ப்பை உச்சரித்திருக்கிறீர்கள்' என்ற தொடர் மண்டபத்திலே எதிரொலித்தது. கல்நெஞ்சர்கள் நிறைந்த அந்த இடத்திலே கருத்து நிறைந்த அந்த வார்த்தைகள் காற்றோடு காற்றாய் கலந்தது!

புருனே காவலாளிகளால் சிறைக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான். மரணத்தைத் தவிர்க்க மன்னிப்புக் கேட்கச் செய்யலாம் என்று எட்டுநாள் தாமதிக்கப் பட்டது. இறத்தலை ஏளனமாகக் கருதிய அந்த இலட்சிய வீரன் அதற்கு இணங்கவில்லை. தீக்குண்டத்திலே புருனேவின் உடலம் வெந்து சாம்பலா

கியது. செந்தீயிலே, சாவு முனையிலே போராடிய நேரத்தில் ஏசுவின் உருவமைந்த சிலையொன்றை அவனிடம் அளித்தார்கள். வெறுப்புடன் கூடிய கேலிச் சிரிப்புடன் அதை வீசியெறிந்தான்.

புருனோ மாண்டுவிட்டான். ஆனால் மரணத்தின் தலைவாயிலிலே அவன் கூறிய பொன்மொழிகள் சாகா வரம் பெற்றன. அவனது அஞ்சா நெஞ்சத்தை, ஆண்மையை உலகு உள்ளளவும் ஒலிபரப்புவன. புருனோவின் அந்த வீர வாசகங்கள், மறச் சொற்கள், பொன் மொழிகள்; "நான் போராடினேன்."

"நான் போராடினேன்—அது போதும்—வெற்றியை நிர்ணயிக்க நான் வரவில்லை. இந்த முயற்சியில் வெற்றி தோல்வி யாருக்கு வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆனால் எதிர்காலம் என்னைப்பற்றி ஒன்றை மட்டும் மறக்காது. அதாவது நான் சாவதற்கு அஞ்சவில்லை. உண்மையை யாருக்கும் சரணாகதி யடைந்துவிடவில்லை. கோழை வாழ்வைவிட வீர மரணமே நான் விரும்பிய பொருள்" என்பதுதான்!

செர்விட்டஸ்

சுவிட்சர்லாந்து நாட்டின் சோபித நகரம் ஜினிவா. அதிலே பொன் ரோஜா விடுதி என்ருேர் இல்லம் வருவோர் போவோர் தங்குமிடம். அங்கே ஓர் சிந்தனையாளன், அவன் கண்களிலே அறிவொளி; நாடோடி போல் காட்சியளிக்கிருன். அவனது தோற்றத்திலே அலட்சியம். முகத்திலே என்ன ரேகைகள். இப்படி ஓர் மனிதன் யாருக்கும் தெரியாமல் மறைந்து வாழ்கிருன் அவனது கருத்து யார் கண்ணிலும் படக்கூடாது என்பது. அவனது ஆவல் அழிகிறது. திடீரென ஒருநாள் அவனது இரகசியம் அம்பலமாகிறது. அரசாங்கம் அவனைக் கைது செய்கிறது. சிறைக் கம்பிகளுக்குப் பின்பு தள்ளப்படுகிருன். 1553-ம் ஆண்டு ஆகஸ்டு 13-ம் தேதி, இந்தப் பயங்கரமான நாள்.

மறுநாள் வழக்கு மன்றத்திலே குற்றவாளிக் கூண்டிலே அந்த விசித்திர மனிதன் நிற்கிருன். நீதிபதி அமர்ந்திருக்கிருர். இவன் ஓர் நாத்திகன்—நாசகாரன்; மத விரோதி - மாதா கோவிலின் வைரி; மார்க்கத்தை அழிப்பவன் - மகேஸ்வரனைப் பழிப்பவன்; தலைமுறை தலைமுறையாக வந்த சம்பிரதாயங்களைத் தவிடு பொடியாக்க நினைக்கிருன், தருக்கன் மக்கள் மனதிலே மாசு தூவ நினைக்கும் மாபாதகன். இவைகளை நிறைவேற்ற ஏடுகள் பல வரைந்துள்ளான். அவை இதோ உள்ளன. அத்தனையும் நஞ்சுக் கலயம்; விஷக்குளம், அது மட்டுமா! புராடஸ்டண்டு மார்க்கத்திற்கு புது உருவம்

சமைத்த சிற்பி; மதப் புரட்சியின் தூதுவன்; புதிய மார்க்கத்தின் காவலன்; கால்வினைப்பற்றி கடுமொழி களிலே ஏசியுள்ளான், கயவன்'' இவைகள் குற்றப் பத்திரத்திலே சில வாக்கியங்கள். இவைகளை வாசித் துக்கொண்டிருந்தான் குற்றஞ் சாட்டுவோன் மதத் திற்கு எதிராக குற்றஞ் செய்வோரைத் தண்டிக்கும் மத மன்றமல்ல அது. அதன் எதிரிகளே வீற்றிருந்த விநோத வழக்கு மன்றம். குற்றப்பத்திரிகை 38 அம்சங்கள் கொண்டிருந்தது. அடுக்கடுக்காக நிறைந்திருந்தன குற் றச்சாட்டுகள். குற்றஞ் சாட்டியவன் லா பான் டைன் (Lo Fontaine) என்பான் கால்வினின் கையாள். அவ னது பதுமை. கால்வினேதான் குற்றப் பத்திரிகை தீட்டியவன், அதன் மீது வழக்கு. ஒருநாள், இருநாளல்ல. ஏறக்குறைய மூன்று மாதங்கள், வேறுவேறு வழக்கு மன்றங்களிலே! வேறு வேறு குற்றப் பத்திரிகைகள், சாட்சிகள் சட்டங்கள், முறைகள்....!

கால்வினே புதிய மதத்தின் தலைவன், பிரெஞ்சு தேசத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட அவன், புகுந்த மண்டலத்திலே தான் சார்ந்துள்ள மாதா கோவிலின் மகோன்னத ஆட்சியை நிறுவியவன். ஸ்விட்சர்லாந்து அரசியலிலே மாதா கோவிலுக்கு அமோக செல்வாக்கு— அதுவே ஆட்சிப் பீடத்தின் பிரதிநிதி—இந்த நிலைமைக் குத் தலைவன், காரணகர்த்தா கால்வின். அரசாங்கமே அவன் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடியது. நமது நாட்டு நிலைமைப்படி கூறுவதானால் அவன் ஓர் ராஜகுரு!! அது மட்டுமல்ல, சட்டத்தில் விற்பன்னன். அப்படிப் பட்ட கால்வினின் வழக்கு ஓர் நாடோடிக்கு, திக்கற்ற மனிதனுக்கு. தேசம், தேசமாகத் திரிந்தவனுக்கு எதி ராக! அந்த மனிதன்தான் மைக்கேல் செர்விட்டஸ் (Michael Servetus).

மறுமலர்ச்சி இயக்கம் தந்த புதல்வன் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவன். 1509-ம் ஆண்டு அரகான்

பகுதியிலே விலனேவா (Vilanova) என்ற இடத்திலே பிறந்தவன். இளமையிலேயே என்ன காரணத்திற்காகவோ தாயகத்தைத் துறந்தவன், டௌலொஸ் (Toulouse) என்ற இடத்தில் சட்டமும், மத சாஸ்திரமும், பயின்ருன். புதுமையிலே ஆர்வமிக்கோன். எதிர் காலத்திலே ஏராள நம்பிக்கை படைத்திருந்தோன். இத்தாலியிலே பிறந்து, புதுவாழ்வுக்காகப் போராடி, நேப்பிள்ஸ், வெனிஸ் மத கோர்ட்டுகளிலே குற்றவாளியாக்கப்பட்டு கடைசியாக ரோமாபுரியிலே, கொண்ட கொள்கைக்காக போப்பின் கட்டளையில் நெருப்பிலே கொளுத்தப்பட்ட புரட்சி வீரன் புருனேவின் பல அம்சங்கள் இவனிடம் காணப்பட்டன. புருனேவைப் போல் புலமை உள்ளமோ, தத்துவ விசாரணை மனேபாவமோ இவனுக்கு இல்லை. ஆனல் உண்மை விஞ்ஞானி. ஓய்வு தெரியாத வாழ்க்கை பெற்ருேன் அறிவுத் தாகம் படைத்தோன். துடுக்கான இயல்பு, கற்பனை நிறைந்த உள்ளம் தூய்மையான செயல். இவை அவனிடம் காணப்பெற்ற பண்புகள். போர்! போர்!! போர்!!! இது அவனது இதய கீதம். நியாயத்திற்காகப் போர், நேர்மைக்காகப் போர்! அறிவுக்காகப் போர்! பழமைக்கு எதிராகப் போர், கொடுமைக்கு எதிராகப் போர்—இதுதான் அவன் வாழ்வின் இலட்சியப் பாட்டு. சுருங்கச் சொன்னுல் அவன் ஓர் பிறவிப் போர்வீரன். மத குருக்களிடம் போரிட்டான். மருத்துவர்களிடம் போரிட்டான். மருந்து முறைகளில், வைத்தியக் கலையில் மருத்துவர்களுக்கு எதிராகப் புதிய மருந்து வகைகளைக் கூறினுன். அவன் ஓர் வெற்றிகர வைத்தியனுங் கூட.

புருனேவைப் போலவே இவனும் ஓர் நாடோடி. ஊர் ஊராகத் திரிந்தான். பல வேறு தலைநகரங்களிலே வாழ்ந்தவன். எதிரிகளிடமிருந்து தப்பிப் பிழைக்க வில்லனியவ் (Villeneuve) என்று பெயரை மாற்றிக் கொண்டான், இத்தாலி, ஜெர்மனி, பாரீஸ், ஆர்லியன்ஸ்,

லயோன்ஸ் முதலிய மாநகரங்களிலே திரிந்தான். தங்குவதற்கு ஓர் உறைவிடம் கிடையாது. தரித்திரனுய் ஏழ்மையின் தோழமை பூண்டு வாழ்க்கைப் பயணத்திலே நகர்ந்து கொண்டிருந்தான். லயோன்ஸ் நகரிலே அச்சகத்திலே புருப் திருத்துபவனுய் இருந்தான். இந்த நேரத்திலே டாலமியின் நில நூலைப் பதிப்பித்தான். பின்னர் பாரீஸ் அவனது வாழ்வு மேடையாகிறது. அங்கே போதகாசிரியன் ஆகிருன். கணிதம், நிலநூல், ஜோதிடம் முதலியவைகளைக் கற்பித்தான். மத விசாரணையிலே அவனுக்கு மட்டற்ற ஆவல்—சிந்தனை செய்வதிலே ஓர் சுவை அவனுக்கிருந்தது, அனைவரிடமும் தெய்வீக சம்பந்தமான ஆட்சேபணைகளை எழுப்பினுன். அவன் புராடஸ்டண்டு மல்ல, கத்தோலிக்கனுமல்ல. இவை இரண்டுக்கும் இடையில் ஓர் கொள்கையைக் கொண்டிருந்தான். சீர்திருத்த வாதிகள் அஞ்சி நடுங்கி ஆராயாது விடுத்தவற்றை எல்லாம் வீரத்தோடும் விறு விறுப்போடும் விவாதித்தான். இதன் விளைவு பலருடைய விரோதம் வேறு என்ன இருக்கமுடியும்? பாரிசில் வைத்தியத் தொழிலும் செய்தான். அவனது வறுமையைச் சமாளிக்க ஓரளவு வரும்படியும் கிடைத்தது. இங்கே மத விரோதமான கருத்துகளமைந்த சோதிட சம்பந்தமான ஓர் நூலை வெளியிட்டான். பழமையின் பாதுகாவலனுயிருந்த பாரிஸ் அரசாங்கம் அவனை நாட்டிலிருந்து வெளியேறுமாறு ஆணை பிறப்பித்தது. சில நாட்களிலே வியன்னே (Vienne) என்ற ஊரில் வில்லனியவ் என்ற பெயரிலே வைத்தியனுய் உலவ ஆரம்பித்தான். தொழிலிலே நல்ல புகழ், அனைவருடைய அன்பு மழை. வாழ்விலே அமைதி, புன்னகை செய்கிறது. வெற்றி மலர் சொரிகிறது வாழ்வை மகிழ்ச்சிப் பூந்தோட்டமாக அமைத்துக்கொள்ள மார்க்கம் அருகிலேயே இருந்தது. உண்மை நாடும் அவனது உள்ளமோ அறிவுப் போரில் அவனை இழுத்துத் தள்ளியது. இரசியமாக யாருக்கும் தெரியாமல் "Christianismi Restitutiv" என்ற நூலை வெளியிட்டான். (இந்த நூலில்

3-பிரதிகள் தான் உலகில் தற்போது உள்ளன என்று கூறப்படுகிறது.) இந்த நூலிலே அவனது கொள்கைகள், கோட்பாடுகள், அபிப்பிராயங்கள் பழைய மதத்தின் குறைபாடுகள் ஆகியவை விவரமாக விளக்கத்துடன் வர்ணிக்கப்பட்டிருந்தன. இந்த ஏட்டைக் கத்தோலிக்கர்கள் மட்டும் கண்டிக்கவில்லை. சீர்திருத்த வாதிகளும் சீறினர். கால்வினின் உற்ற நண்பனொருவன் இந்நூலின் பிரதி ஒன்றைக்கண்ணுற்றான். கனல் கக்கும் கடுமொழிகளிலே கத்தோலிக்கர் இந்த நாத்திக நூலை எப்படி அச்சாக அனுமதித்தனரென்று ஆத்திரத்தோடு குற்றஞ் சாட்டி வியன்னேவிற்குக் கடிதம் தீட்டினான். இதைப் பொறுக்காத வியன்னே மதவிசாரணை மன்றம் வில்லனியவ் என்ற செர்விட்டஸ் மீது தனது அடக்குமுறை ஈட்டியை வீசியது. 1553-ம் ஆண்டு ஏப்ரல் 4-ம் தேதி செர்விட்டஸ் கைதானான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த விசாரணையில் செர்வீட்டஸுக்கு எதிராக சாட்சிகள் தயாரிப்பது அவ்வளவு எளிதாக இல்லை. இலேசான காரியமாகவும் தென்படவில்லை. வியன்னேவிலிருந்த வைத்தியனை இந்தத் தூற்றல் ஏட்டின் (அவர்கள் கருத்துப்படி) ஆசிரியன் என்று நிரூபித்தாகவேண்டும். அது நடக்கக்கூடிய காரியமல்ல அந்நாளில், ஆசிரியர்கள் ஆதிக்கக்காரர்களின் அட்டகாசத்திற்கும் அடக்குமுறைக்கும் பயந்து பல குறுக்கு வழிகளிலே நூல்கள் பதிப்பித்தனர். எங்கு பறிமுதலாகிவிடுமோ, பாதக ஏடு என்று கண்டனம் கிளம்புமோ என்ற அச்சம், பயம், நூல் எழுதுவோருக்கு. எனவே நேர்மையாளர் கூறுகிற பல தவறான வழிகளிலும் நூல்கள் வெளிக்கொண்டு வந்தனர். பலமுறைகளையும் கையாண்டனர். உதாரணமாக அட்டைப் பக்கத்திலே "பாரீஸ்" என்ற பெயரிருக்கும். உண்மையிலே அந்த நூல் "ஹலாந்து" நாட்டிலே அச்சாகியிருக்கும். பொய் பெயர்களிலே நூல் வெளியிடுவது, அவமானகரமான செயலாகக் கருதப்படவில்லை. அடக்குமுறைக்குப் பலியான ஆசிரியன்

தந்திரசாலியானுன் அதை அவன் திறமை என தரணி போற்றியது.

அந்த நூலின் ஆசிரியர் செர்விட்டஸ்தான் என்பதற்கு ஆதாரங்கள் கொடுத்தது கால்வின். ஓர் பெரிய மனிதன் செய்யக்கூடாத செயல். ஆம், ஓர் உயர்தர போதகாசிரியர், கீழ்த்தர துப்பறியும் உளவு வேலை செய்தார்! செர்விட்டஸுக்கும் தனக்கும் நடந்த எழுத்துப் போரில் தன்னிடமுள்ள கடிதங்களை நண்பன் மூலம் மதவிசாரணை மன்றத்திற்கு அனுப்பினுர். மத விசாரணை மன்றம் வழக்கில் ஏனே அக்கரை காட்ட வில்லை. கால்வினின் தூண்டுதல் பேரில்நடப்பதா என்று நினைத்தோ என்னவோ, கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்தது. இந்த நேரத்தில் கைதியான செர் விட்டஸ் தப்பித்துவிட்டான்! ஆள் "மறைந்து" விட்டதால், கண்டனம் செய்வதாகத் தெரிவிப்பதைத் தவிர வேறுவழி கிடைக்கவில்லை. எனவே கோர்ட் செர்விட்டஸை கண்டனம் செய்தது. அதன் அறிகுறி யாக வியன்னேவின் சந்தை வெளியிலே அவனது நூல் கள் தீக்கிரையாக்கப்பட்டன. அவனைப்போல் உருவம் செய்து கொளுத்தினுர்கள்.

அவனது போலி உருவம் தணலுடன் ஆலிங்கனம் செய்த நேரத்திலே பிரான்சிலே அடைக்கலம் தேடி யலைந்து கொண்டிருந்தான் துர்ப்பாக்கிய அறிஞன்! ஸ்பெயின் எல்லையில் இருப்பிடம் அமைக்கலாம் என எண்ணினுன். ஈடேறவில்லை எனவே இறுதியாக இதா லிக்கு கிளம்பினுன் வழியிலே தான் ஜீனிவாவிலே தங்கினுன் பயணத்தின் நடுவே. அங்கே வஞ்சனே அளித்த பரிசுதான் வழக்கு குற்றவாளிக்கூண்டு! அது தான் நாம் ஆரம்பத்திலே தீட்டியுள்ள பகுதி. குற்றப்

பத்திரிகை படிக்கப்படுகிறது பூர்வாங்க விசாரணை முடிகிறது 1553 ஆகஸ்ட் 15ந்தேதி மேல் மேல்கோர்ட்டிற்கு வழக்கு மாற்றப்படுகிறது. தேவ நிந்தனைக்காக விதண்டா வாதத்திற்காக அவன் மீது கடுங்குற்றம். பதில் கேட்கப்படுகிறது. சமாதானம் வேண்டப் படுகிறது. எதிர்ப்பக்கம் கோர்ட் சாய்கிறது. சொர்விட்டஸ் சொற்கள் பாலைவனத்திலே வீசப்பட்ட பனிக் கட்டியாகிறது.

ஆகஸ்ட் 16. பெர்தலியர் என்பான் நீதிபதிக்குத் துணையாக அமர்த்தப்படுகிறான். செர்விட்டஸ் பக்கம் சாதகமாய்ப் பேசுகிறான். கடுமையான வாக்குவாதம் நடக்கிறது. ஆகஸ்ட் 17. கால்வின் முன் வருகிறான். தானே குற்றஞ் சாட்டியவன் எனக்கூறி பெர்தாலியர் தன்மையை எதிர்க்கிறான். மீண்டும் வழக்கு மன்றத்திற்கு வர அனுமதிக்கப்படுகிறான். மதத்தைப்பற்றிய வாக்குவாதம் பலமாய் நடக்கிறது.

ஆகஸ்ட் 18. வழக்கு சர்க்கார் தரப்பு வக்கீலிடம் தரப்படுகிறது. செர்விட்டஸ் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறான். அவனது வாழ்வு, கொள்கை இவை பற்றி ஏராளமான கேள்விக் கணைகள் வீசப்படுகின்றன. அவனது பகுத்தறிவுக் கொள்கைகள் பளிச்சென தெரிகின்றன, கோர்ட்டாருக்கு அவன் பதிலிலிருந்து.

ஆகஸ்ட் 21. வழக்கை நிறுத்திவைக்கலாம் என்ற முடிவு. ஆனால் இவனது நாத்திகம் கிருஸ்தவ மதத்திற்குப் பேராபத்து; எனவே தொடர்ந்து நடத்தவேண்டும், என்று கருதுகிறது. அத்துடன் வியன்னேவில் கைதான விவரம், காரணம், தப்பிய வரலாறு, இவைகளை வரவழைக்க ஏற்பாடு செய்கிறது.

ஆகஸ்ட் 22. திடீரென புதிய மாறுதல். புதிய குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது. அவனது போதனைகள் செய்யும் தீயவிளைவுகள் வற்புறுத்தப்படுகின்றன. கால்வின் மதபீடத்திலிருந்து செர்விட்டஸுக்கு எதிராக பிரச்சாரம் செய்கிறான்; கட்சி சேர்க்கிறான். ஆகஸ்ட் 23. வியன்னே கோர்ட் ஆதாரங்கள் அனுப்ப மறுக்கிறது. செர்விட்டஸைத் திருப்பி அனுப்ப வேண்டுகிறது. இந்த வேண்டுகோள் விழலுக்கிறைத்த நீராகிறது.

செப்டம்பர் 5. சர்க்கார் வக்கீல் மறைகிறார். அந்த இடத்தை கால்வின் நிரப்புகிறான். லத்தீன் மொழியிலே குறுக்குக் கேள்விகள் கேட்கிறான். இந்த வழக்கு சம்பந்தமாய் மதகுருமார்களின் அபிப்பிராயம் கேட்கப்படுகிறது. கால்வின் தன்பக்கம் படை திரட்டுகிறான்.

அக்டோபர் 19, 23. மாதா கோவிலும் மதக்குருமார்களும் செர்விட்டஸுக்கு எதிராக தீர்ப்பளிக்கின்றனர்.

அக்டோபர் 26. தீர்ப்புநாள். தண்டனை விதிக்கப்படுகிறது. ஒரு அஞ்சா நெஞ்சனின் அறிவுப் புரட்சிக்குப் போரிட்டவனின் வாழ்வையே குலைத்த தீர்ப்பின் வாக்கியங்கள் இவை.

“மைக்கேல் செர்விட்டஸ் என்பவன் மாபெருந் தவறுகளும், மதவிரோதச் செயல்களும் செய்தவன் என்று நிருபிக்கப்படுவதால், சேம்பல் (Champel) என்ற இடத்தில் அவனை உயிருடன் நெருப்பிலே கொளுத்துமாறு இந்த கோர்ட் கட்டளையிடுகிறது. இந்த ஆணை, நாளை நிறைவேற்றப்படும். அவனது நூல்களும் அத்துடன் எரிக்கப்படும்.”

மறுநாள் சேம்பலில் ஓர் உயர்ந்த மேடை. அதிலே தீக்குண்டம், நெருப்பு மூட்டப்பட்டுள்ளது. அதிலே செர்விட்டஸ் உயிரோடு தள்ளப்பட்டான். செந்தீயின் சித்திரவதை சிந்தனையாளனுக்கு. தீ அவனது உடலையும் உயிரையும் அழித்தது. ஆனால் அவன் வளர்த்த சிந்தனைத்தீயை அழிக்கமுடியவில்லை—அழிக்க முடியாது. அது வளர்ந்துகொண்டே இருக்கிறது. வளர்ந்தே தீரும்.

பெர்னார்ட்ஷா

1950–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2–ந்தேதி விடியற்காலை. இலண்டன் மாநகரத்திலேயுள்ள ஒரு வட்டாரத்திலே 'அயாட் செண்ட்லாரன்ஸ்' என்றோர் இல்லம். அதிலே நல்ல காற்றோட்டமுள்ள ஒரு அறையிலே ஒரு படுக்கை, அந்த அறையிலே ஒரு பெரியவர் மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கிறார். மெழுகு வர்த்திஎரிந்து கொண்டிருக்கிறது. அதன் மங்கிய ஒளியிலே ஓர்தாதி அங்குமிங்கும் போய்கொண்டிருக்கும் காட்சிதென்படுகிறது. திடீரென மெழுகு வர்த்தி அணைக்கப்படுகிறது. அறையை இருள் கௌவுகிறது. மௌனமும் துயரமும் அவள் முகத்தைச் சூழ்ந்துகொள்கிறது. அறையைவிட்டு வெளியே வருகிறாள், வாயிலருகேயுள்ள கதவிலே, ஒரு கடிதத் துண்டை எடுத்து ஏதோ எழுதி ஒட்டுகிறாள், ஏராளமான பத்திரிகை நிருபர்கள் அவள் சேதிக்கு துடித்துக் கிடக்கின்றனர். அவர்களெல்லாம் கடிதத் துண்டை நோக்குகின்றனர். அதிலே எழுதியிருக்கிறது 'பெர்னாட்ஷா இன்று விடியற்காலை இயற்கை எய்தினார்' என்று.

அன்று காலை கீழ் வானிலே உதித்த ஆதவன் பேரறிஞரின் அறிவை உமிழும் கண்களைச் சந்திக்கவில்லை இமைமூடிய கண்களுடன் கூடிய சடலத்தைத்தான் சந்தித்தான். லண்டன் பத்திரிகைகள் கருப்புக் கோடிட்ட தலையங்கத்துடன் வெளியாகியது. லண்டனிலே மட்டுமல்ல, அமெரிக்காவிலே, ஐரோப்பாக் கண்டத்திலே, ஆசிய நிலப்பரப்பிலே ஏன் அகில

முழுதும், எங்கெங்கு பத்திரிகைகள் இருக்கின்றனவோ, அவற்றிலெல்லாம் அவர் மறைவு குறித்தே புகைப்படங்களும், கட்டுரைகளும் தீட்டப்பட்டிருந்தன. இதற்கு முன் உலகப் புகழ்பெற்ற எவ்வளவோ பேர் மறைந்திருக்கின்றனர். மண்டலாபதிகள் மறைந்திருக்கின்றனர். மாவீரர்கள் மறைந்திருக்கின்றனர். அறிஞர்கள் மறைந்திருக்கின்றனர். ஆற்றல்மிக்கோர் மறைந்திருக்கின்றனர். அவர்கள் யாருடைய மறைவும் உலகத்தை இவ்வளவு கவர்ந்ததில்லை. ஒவ்வொருவருடைய மறைவும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திலே தான் முக்கியத்தைப் பெற்றது. இந்த மனிதரும் அப்படி ஒன்றும் பெரிய சாம்ராஜ்யத்தின் தலைவருமல்ல. பெரும் பொறுப்பிலே வீற்றிருந்தவருமல்ல, மிகமிக சாமான்யமானவர். நாடக ஆசிரியர் கட்டுரையாளர், சீர்திருந்தக்காரர், அறிவாளி அவ்வளவு தான். இதற்குமுன் எத்தனையோ நாடகாசிரியர்கள் இருந்திருக்கின்றனர். இலக்கிய மாளிகைக்கு அழகுவடிவம் சமைத்த கட்டுரையாளர், கலைஞர் இருந்திருக்கின்றனர். சீர்திருந்தச் செம்மல்கள் இருந்திருக்கின்றனர். அவர்கள் யாருடைய மறைவிலும் மாநிலம் இவ்வளவு துக்கப்பட்டதில்லை. சோகத்தை வரவழைத்துக் கொண்டதில்லை. ஆங்கில இலக்கிய உலகம் ஈடு இணையற்ற எழுத்தாளனை இழந்ததாகத் தவித்தது. இந்த நூற்றுண்டிலே இனிப்பெற முடியாத ஒப்பற்ற பேரறிஞனை பறிகொடுத்து விட்டதாக அறிவுலகம் கண்ணீர் சிந்தியது.

அவர்கள் துயர கீதத்தில் அர்த்தமில்லாமல் இல்லை. பேரறிஞர் பெர்னர்ட்ஷா மானிட சமுதாயம் இந்தத் தலைமுறையிலேபெற்ற அறிவுக் கருவூலம். சிந்தனைச் சுரங்கம் அவரது மறைவு அறிவுலகத்திற்கு மகத்தானதோர் நஷ்டம். அவரது எழுத்தோவியத்தால் ஆங்கிலத்தின் எழில் பன்மடங்கு அதிகமாக ஜொலித்தது. அவரது நாடகங்கள் அவனி உள்ளளவும் மக்கள் மன்றத்திலே நடமாடும் பெருமை பெற்றவை. அவர் வெறும் இலக்

இய கர்த்தா மட்டுமல்ல. சமுதாய சீர்திருத்தத்தின் தலைவர். புரையோடிப் போயிருக்கும் சமுதாயத்திற்கு புது வலிவு உண்டுபண்ணி, புத்துருவம் சமைக்கப் போராடியவர். முன்பிருந்த சீர்திருத்தச் செம்மல்களெல்லாம் பழமையின்மீதே தமது பார்வையைச் செலுத்தினர். பழமையிலேயுள்ள பாசிகளை, குருட்டுக் கோட்பாடுகளை அழித்தொழிப்பதிலேயே அவர்கள் கவனம் சென்றது. இவரோ புதுமையிலேயுள்ள தகாதவைகளையும் கண்டிக்கத்தவறவில்லை. இதுநாள் வரையிலே பழமை ஏற்பாடுகளுக்கு எதிராக, பரம்பரை பரம்பரையாக வந்துள்ள எண்ணங்களுக்கு எதிராகத்தான் அறிவின் தூதர்கள், போர்ப்பிரசுடனம் செய்துள்ளனர். இவரோ அறிவுலகத்தின் மீதே போர் தொடுத்தார். அறிவுலகத்திலேயுள்ள அறியாமையை இவர்போல் கண்டித்தவர் வேறு யாருமில்லை. சமதர்மக் கோட்பாடு, அதன் தத்துவம் ஆகியவைபற்றி ஆங்கிலநாட்டார் அறிந்துகொள்வதற்கு பேருதவியாய் இருந்தது. இவரது பேராற்றல் மிக்க பிரசங்கங்கள்தான். இவரது இறுதி நாட்களிலே இவரது கைலாகுக்காக காத்துக்கிடந்தோர் ஆயிரம் ஆயிரம்பேர். இவரது கையெழுத்து ஒன்றிற்காக 'தவம்' கிடந்தோர் ஏராளம். இவர் வாய்திறந்து பேசினுல் போதும், அதை கொட்டை எழுத்துக்களிலே பிரசுரிக்க அவனி முழுவதுமுள்ள பத்திரிகைகள் காத்துக்கிடந்தன. உலகத்திலே தோன்றிய எந்த எழுத்தாளனுக்கும், நாடக ஆசிரியனுக்கும் இவரது எழுத்துக்களுக்கும், நாடகங்களுக்கும் கொட்டிக் குவித்த அளவு பணத்தை கொடுத்ததில்லை. பெர்னுர்ட்ஷா என்ருல் அறிவின் தூதர், அறிவுலகம், மேதை, பேரறிஞர், விலைமதிக்க முடியாத அறிவுப் பெட்டகம் என்று நாடும் நானிலமும் கருதியது. இவ்வளவு வெற்றிகளைப் பெற வளைவு நெளிவுகளைப் பயன்படுத்தினுரா, வசீகரமாகப் பேசி மயக்கினுரா, வம்புகளுக்குப் போகாமல் இருந்தாரா, வையகத்தார் நம்பும் வழியிலே நடந்தாரா என்று கேட்டால் அதுதான் இல்லை. வையகம் எந்த வழிச்செல்லுகிறதோ அதற்கு நேர் விரோதமான

வழியைக் காண்பித்தார். சகல விஷயங்களையும் வம்புக் கிழுத்தார். நையாண்டி செய்வதையே தொழிலாகக் கொண்டார். இதை 'வசைமாரி' எனக் குற்றம் சாட்டினர் வம்பர்கள். 'நாலுபேருக்கு நல்லவன்' என்ற பெயரை எடுக்க முயற்சிக்கவில்லை. 'நான் கருதுகிறேன் நம்பினால் நம்பு, நம்பாவிட்டால் எனக்கென்ன நஷ்டம்' என்ற துடுக்குப் பாணியிலே பேசினார். கோமாளி என்று தான் குவலயம் தூற்றல் பாணத்தைத் தொடுத்தது. ஆனால் கோமாளித்தனத்திற்குள் கூர்த்தமதி மறைந்திருப்பதை நெடுநாட்கள் உணரத்தான் இல்லை. அடிமை விலங்குகள் பூட்டப்பட்டிருந்த அயர்லாந்தில், தரித்திர நாடு என்று தரணி முழுதும் கருதப்பட்ட அயர்லாந்தில் தான் பிறந்தார். ஆனால் நாகரிகத்தின் சிகரத்திலே சஞ்சரிப்பவர்கள், அவர்கள் ஆளுகைக்கு அகில உலகமும் கைகட்டி வாய்பொத்தி நடுங்குகிறது என்ற புகழ்பெற்ற ஆங்கில நாட்டை தனது அறிவாற்றலால் குலுக்கி வெற்றிமாலையும் சூடினார். இந்த வெற்றி திடீரென்று தோன்றியதுமல்ல. யாரோ கொடுத்த 'வரப்பிரசாதமுமல்ல. சண்டமாருதமெனக் கிளம்பிய எதிர்ப்புக்களை சமாளித்து, தூற்றல் மாரிக்கிடையே நனைந்து, வறுமைச் சேற்றிலே தத்தளித்து, பிடிவாதம், உறுதி, நேர்மை, அறிவாற்றல் ஆகியவைகளின் உதவிகொண்டு கரையேறி நாட்டிய வெற்றி, பெர்னார்ட் ஷாவின் வெற்றி.

பிடிவாதக்காரன்,
பித்தன்,
வெறியன்.
கிறுக்கன்,
கோமாளி,
எதையும் எதிர்ப்பவன்,
யாரையும் குறை கூறுபவன்.

இவைகள்தான் துவக்க நாட்களிலே, பேரறிஞர் என்று பின்பு பெருமையுடனும் பூரிப்புடனும் புகழ்ந்ததே அந்த பெர்னுர்ட்ஷாவிற்கு கொடுத்த அடைமொழிகள்! அடைமொழிகளா அவை! வடிகட்டிய வசைச்சொற்கள்.

எந்த பெர்னுர்ட்ஷா தலைசிறந்த இலக்கிய ஆசிரியர் என்பதற்காக 1925-ல் நோபல் பரிசு வாங்கினுர்களோ, அவரின் கட்டுரைகளை ஆரம்ப நாட்களிலே எந்த பத்திரிகையும் பிரசுரிக்க முன்வரவில்லை. எந்த பதிப்பாளனும் அவரது நூல்களை வெளியிட முன்வரவில்லை.

எந்த பெர்னுர்ட்ஷாவின் எழுத்துக்காக கோடிக் கணக்கான பொருளைக் கொட்டிக் குவிக்க காத்துக்கிடந்தனரோ, அந்த பெர்னுர்ட்ஷா லண்டனிலே தங்கியிருந்த முதல் ஒன்பது ஆண்டுகளிலே எழுத்தால் பெற்ற பொருள் ஆறே பவுன்தான்! அதிலும் ஐந்து பவுன் ஓர் மருந்து விளம்பரம் எழுதியதற்காகப் பெற்றது. அழுக்கடைந்த, பொத்தல் நிறைந்த துணிகளை மாட்டிக் கொண்டு எலும்புருவமான பெர்னுர்ட்ஷா லண்டன் தெருக்களிலே நாதியற்றுத் திரிந்தார் யாரும் கவனிப்பாரற்று ஏறி இறங்காத பதிப்பகம் இல்லை. கையெழுத்துப் பிரதிகளை அனுப்பாத பிரசுராலயங்கள் இல்லை. முடிவு இவர் கையெழுத்துப் பிரதிகள் இவருக்கு வந்து சேர்ந்ததுதான்!

எந்த பெர்னுர்ட்ஷா நாடக உலக மன்னர் என்று புகழப்படுகிருரோ, அந்த பெர்னுர்ட்ஷாவின் முதல் நாடகம், நாடக மேடையிலே பெரியதோர் எதிர்ப்பைக் கிளப்பி, அமளியை உண்டுபண்ணி, தோல்வியுற்றது. இரண்டாவது நாடகம் மேடைக்கு இலாயக்கற்றதாக மூலையிலே எறியப்பட்டது. மூன்ருவது நாடகத்திற்கு அரசியலார் தடைவிதித்தனர். பல ஆண்டுகள் நாடக மேடையையே எட்டிப் பார்க்கமுடியவில்லை.

அந்த நாட்களிலே பிரிட்டனிலே நாடகங்கள் வெறும் இன்ப நோக்கங்கொண்ட பொழுது போக்குக் கேளிக்கூத்துக்களாகத்தான் இருந்தன. விவாகரத்துக் கள், சட்டமன்றங்களிலே போலீஸ் நடவடிக்கை ஆகியவைதான் மேடையிலே சித்தரிக்கப்பட்டன. சமூக, மத, அரசியல், தத்துவம் ஆகிய கோட்பாடுகளை ஷாதான் தீவிரமாகப் புகுத்தினார். இப்சன் என்பவரின் முறையைப் பின்பற்றி ஷேக்ஸ்பியரை கண்டித்தவர் ஷா. எனவேதான் எவ்வளவோ பயங்கர எதிர்ப்புப் புயலிடையே நிற்கவேண்டியவரானார்.

மனைவி இழந்தார் மனைகள் (Widowers Houses) என்ற நாடகத்திலே வீடுகள் இல்லா ஏழைப் பஞ்சைகளுக்கு வீடுகள் கொடுத்திருக்கும் செல்வரின் கொடுமையைச் சித்தரிக்கிறார்.

திருமதி வாரனின் வாழ்க்கைத் தொழில் (Mrs Warren's Profession) என்ற நாடகந்தான் சர்க்கார் தணிக்கை போர்டு தடை விதித்த நாடகம். விபசாரத்தைத் தாக்குவது இந்நாடக விஷயம். பெண்களுக்கு சொத்துரிமையும் தொழிலுரிமையும் இல்லாத காரணத்தால் சுயமரியாதையும் ஒழுக்கமும் இருக்கமுடியாது என்பதை வற்புறுத்துகிறது. வழுக்கி விழுந்த வனிதை வாரன், அவளது போலி வாழ்வு, அவளது அருமைப் புதல்வி விவிவாரனுக்கு கல்விமுதலிய வாய்ப்புகளை அளிப்பது, அன்னையை அருவறுக்கும் விவிவாரன் காதலிக்கும் வாலிபனின் அன்பை உதறி பெண்குலத்தின் உயர்வுக்கு உழைக்கும் விவிவாரனின் வீரம்—ஆகியவைதான் நாடகச்சுருக்கம். இதுதான் 30 ஆண்டுகள் மக்கள் மன்றத்தில் நடமாடமுடியாமல் முடக்கிவைத்திருந்தனர் ஆளவந்தார். சமுதாயத்திலே நிலவும் கெட்ட பழக்கங்களை ஒழிக்க அவைகளை நாடகங்களிலே தீட்டவேண்டும் என்று வாக்குமூலம் கொடுத்தார், இதைப் பரிசீலனை செய்ய எழுந்த கமிட்டியின் முன்பு.

இவரது கீர்த்திக்கு சிகரமாய் இருப்பது செயிண்ட் ஜோன் (St Joan) என்னும் நாடகம். பிரஞ்சு நாட்டிலே டாம்ரமி என்னும் கிராமத்திலே பிறந்த குடியான குலக் குமரி, மன்னனும் படைகளும் மாற்றாரிடம் மண்டியிட காத்திருந்த தருணம், ஆண்டவன் ஆணை என்று சொல்லி நாட்டை மீட்கிறாள் கடும் போரிட்டு. ஆனால் எதிரியின் கையில் சிக்கி மதகுருக்கள் மன்றத்தில் குற்றஞ்சாட்டப் பட்டு நெருப்பிலே கொளுத்தப்படுகிறாள். காலம் மாறு கிறது. மக்கள் மன்றம் மட்டுமல்ல, மத குருமார்களே 'செயிண்ட் ஜோன்' என்று வணங்குகிறார்கள் வீர வனிதையை. இந்த நாடகத்திற்குப் பிறகு ஷா புகழேணி யில் வேகமாக ஏறினார்.

1859ல் அயர்லாந்தில் உள்ள டிப்ளினில் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஷா 1898ல் சார்லட் பெய்ன் ஷெண்ட் (Charlottee Payne Townshend) என்னும் சீமாட்டியை மணந்து கொண்டார். இவர் பணியாற்ற பேபியன் சங்கத்திலே அவர்கள் தொடர்பு துவங்கியது.

முதலாளித்வம், சோஷியலிஷம் ஆகியவற்றை விவ ரிக்கும் முறையிலே Intelligent Woman' guide to Capitalism and Socialisom என்ற நூலைத் தீட்டியுள் ளார்.

Every body's Political What's What என்ப திலே ஒவ்வொருவருக்கும் தேவையான அரசியல் எது என்பதை விளக்குகிறார்.

கடவுளைத் தேடிய கருப்பு மங்கை (The Black Girl in search of God) என்ற நூலின் இயேசு குறித்தும் மத குருமார்கள், கடவுள் என்ற போர்வை யிலே செய்யும் கயமைத்தனமும் விபரமாக வர்ணிக்கப் படுகிறது.

ஷாவின் அரசியல் கொள்கைகளைத் தெளிவாகக் கூறும் நாடகம் மேஜர் பார்பாரா என்பது (Major Barbara) அதிலே குறிப்பிடுகிருர், பொருளாதார பேதம் உள்ளவரையில் மனித குலம் சிறந்த மனிதர்களாக எல்லோரையும் ஆக்காது. சிலர் உயர்ந்தும், பலர் தாழ்ந்தும் என்றென்றும் இருப்பர். தர்மம், ஒழுக்கம், கடவுள், மதம், நியாயம், நேர்மை, மோட்சம், நரகம். வேதாந்தம் சித்தாந்தம், கலை, காவியம் கலாச்சாரம் ஆகிய அத்தனையும் அந்த ஏற்பாட்டை அழியவிடாமல் பாதுகாக்கும் அரண்கள் இந்த எண்ணங்கள் ஏழையின் மூளையிலே படித்திருக்கிற வரை அவனுக்கு விடுதலை வாழ்வில்லை சீமான்கள், செல்வச் செருக்கரின் தர்மபோதனையைத் தலைமுழுகி விட்டுப் புது வாழ்வுபெற உரிய விலை கொடுக்கத் தயாராக வேண்டும். அவனது அடிமைத் தனத்தை அழித்தொழிக்க தேவை இரண்டு: ஒன்று பணம், மற்றது வெடிகுண்டு.''

பெர்ஞர்ட் ஷா வாழ்வு தனி மனிதனின் போராட்ட வரலாறு மட்டுமல்ல. அறிவுப்புரட்சி என்னும் ஏட்டிலே அகற்றப்படமுடியாத அத்தியாயம். அவர் ஏந்தியிருந்த அறிவு விளக்கு என்றும் அணையாது. அதை எதிர்காலத்திற்கும் எடுத்துச் செல்ல எத்தனையோ மாவீரர்கள் வருவர். வந்துவிட்டனர். அறிவொளியால் உலகத்தை நிரப்புவதை எந்த சக்தியாலும் தடைப்படுத்தமுடியாது.

திராவிடப் பண்ணை

திருச்சி

Wrapper Printed by : RAINBOW PRINTERS, Tiruchirappalli-8